விலை சதம் 20

# சுதந்திரன்
# SUTANTIRAN






வள்ளுவர் ஆண்டு 2000, புரட்டாதி 17 ஆம் வெள்ளி (3-10-69) றஜபு 20 புத்தகம் 23 இதழ் 47

# தமிழர் சிங்களம் படிப்பது இன அழிவுக்கு வழியாக்கும்

## சிங்கள ஆசிரியர் நியமனத்துக்கு தமிழரசார் கடும் எதிர்ப்பு!

போதனா மொழிப் பிரச்சினையுட்பட தமிழர்களின் மொழிப்பிரச்சினை இன்னும் திருப்திகரமாகத்தீர்ந்த பாடில்லை. தமிழர்களின் போதனா மொழியாக சிங்களத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ புகுத்தி, தமிழினத்தை அழித்தொழிக்கும் இனக் கொலைத் திட்டத்தை சிங்கள ஆட்சியாளர்களும்சிங்கள அரசியற் கட்சிகளும் இன்னும் கைவிடவில்லை. எப்படியும்நாடு முழுவதும் ஒரே இனம்—ஒரே மொழி ஒரே மதம் என்ற இலட்சியத்தை அடைந்துவிட வேண்டுமென்பதை சிங்கள கட்சிகள் அனைத்தும் தமது அடிப்படை இலட்சியமாகக் கொண்டுள்ளன. இப்படிப்பட்ட அரசியல் நிலையில் தமிழினத்தவர்கள் சிங்களத்தை படிக்க எண்ணுவது தற்கொலை செய்து கொள்வது போன்ற செயலாகும். அதுமட்டுமன்றி சிங்களம் படிப்பதால் உரிமைப் போராட்டத்தின் மூலம் தமிழுக்கு இன்று கிடைத்திருக்கும் அற்ப சொற்ப உரிமைகளைக் கூட இழந்துவிடும் ஒரு சூழ்நிலை தோன்றி விடும்' எனவேதான் தமிழர்கள் சிங்களம் படிப்பதையும் சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவதையும் தமிழரசுக்கட்சி கடுமையாக எதிர்க்கிறது,

—இவ்வாறு தமிழரசு வட்டாரங்கள் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழில் காசோலை அரசு பணிந்தது!

தனிச் சிங்களத்தில் மட்டுமே காசோலை வழங்குவது என்று பிடிவாதமாக இருந்த அரசாங்கம் இப்பபோது பணிந்து சிங்களத்துடன் தமிழிலும் காசோலை வழங்க முன் வந்திருக்கிறது.

அரசாங்கத்தின் பிடிவாதத்தை முறியடித்து தமிழில் காசோலையை பெற்றுக் கொண்டிருக்கிறார் கோப்பாய் தமிழரசுக் கட்சிக் கிளையின் தலைவர் திரு. நாகலிங்கம்.

தனிச் சிங்களக் காசோலையை ஏற்றுக் கொள்ள மறுத்த இவர் கடந்த ஓராண்டுக்கு மேலாக தமக்கு தமிழில் எழுதப்பட்ட காசோலை தரப்பட வேண்டுமென வாதாடி வந்தார். இறுதியில் ஆட்சி பீடம் பணிந்து கொடுத்தது. சிங்களத்துடன் தமிழிலும் அதிகார பூர்வமாக எழுதப்பட்டு இப்போது இவருக்கு காசோலையை அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

தமிழர்கள் விடாப் பிடியாக உறுதியுடனிருந்தால் மட்டுமே தமது மொழியுரிமையை நிலைநாட்ட முடியுமென்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

## தீவுபகுதி பிரச்சினைகளை தீர்க்க அபிவிருத்தி நிறுவுக!

### சபையில் பண்டிதர் தீர்மானம்!

தீவுப்பகுதியின் அபிவிருத்தி குறித்து தேவையான நடவடிக்கைகளை தீவுப்பகுதி அபிவிருத்தி சபை யொன்று அரசாங்கத்தால் நிறுவப்பட வேண்டுமென இம்மாதம் 6ந் திகதி பாராளுமன்றத்தில்பண்டிதர் கா. பொ-இரத்தினம் தனிநபர் பிரேரணை யொன்று கொண்டு வருகிறார்.

அப்பிரேரணை கூறுவதாவது:-

'யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நெடுந்தீவு, நயினாதீவு, எழுவை தீவு, அனலைதீவு, புங்குடு தீவு லைடன் தீவு மண்டைதீவு, காரைநகர் என்னும் தீவுகள் நிலவளமும் தண்ணீர் வளமும், மழைவளமும், குறைந்தனவாகவும், போக்குவரவு வசதிக் குறைவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் உடையனவாகவும் இருப்பதால் இவ்விடங்களில் வாழும் மக்களின் இடர்ப்பாடுகளை நீக்கி அவர்களின் வாழ்வை வளம் படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இன்றியமையாததாகையாலும், இவர்களின் பிரச்சினைகள் இலங்கையின் ஏனைய பகுதி மக்களின் பிரச்சினைகளிலும் வேறுபட்டனவாக இருந்தாலும், இன்று வரை இப்பிரச்சினைகளைத் தீர்க்க விசேட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காமையாலும், அனுராதபுரம் பேணற்சபை, கண்டிக் கமக்காரர் புதுவாழ்வு ஆணைக்குழு என்பனவற்றைப் போன்றதாகத் 'தீவுப் பகுதி அபிவிருத்திச் சபை' ஒன்றை நிறுவுதற்கு வேண்டிய நிதியை ஒதுக்குதற்கும் அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சபை கருதுகிறது.'

## வெங்காய விலை 5 சதம் அதிகரிக்க வேண்டும்

**வெங்காயத்தின் உத்தரவாத விலை 5 சதத்தால் உயர்த்தப்பட வேண்டுமென பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பாராளுமன்றத்தில் இம்மாதம் 6ந் திகதி ஓர் பிரேரணை கொண்டுவருகிறார்.**

● கல்வியமைச்சின் பூரண ஒத்துழைப்புடன்

## சைவத் தமிழர்களை பௌத்த சிங்களவராக்கும் சூழ்ச்சி ஆரம்பம்!

வட பகுதியில் தமிழ் சைவப் பிள்ளைகளை பௌத்தர்களாக்கும் திட்டத்துக்கு கடந்தவாரம் கால் கோள் நாட்டப்பட்டிருக்கிறது. ஏழைச் சிறுபான்மைத் தமிழ்க்குடும்பங்களுக்கு இலவச பாடப் புத்தகங்களும் பளபளப்பான உடைகளையும் வாங்கிக்கொடுத்து ஆசை காட்டி அவர்களை பௌத்த சிங்களவர்களாக்கும் திட்டத்தினை அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கல்வியமைச்சு அதிகாரிகளின் அனுசரணையுடன் செயற்படுத்த ஆரம்பித்திருக்கிறது.

கடந்த வாரம் அண்மையில் அரசாங்கத்தால் பொறுப் பேற்கப்பட்ட மூன்று சிறுபான்மைத் தமிழ் பாடசாலைகளிலும் பௌத்த மத வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த 'மகிழ்ச்சிகரமான' வைபவத்தில் கல்வியமைச்சு உயர் அதிகாரிகளும், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் பிரமுகர்களும், தென்னிலங்கையிலிருந்து வந்து பங்கு கொண்டனர். கல்வியமைச்சைச் சேர்ந்த மா அதிகாரி திரு. குலதுங்க, டி. ஜீ. மெண்டிஸ் ஆகியோரே முன்னின்று இதை நடத்தினர். 'பன்சில்' ஓதப்பட்டு இப்பாடசாலைகள் மூன்றும் பௌத்த பாடசாலையாக்கப்பட்டுள்ளன.

நூற்றுக்கு நூறு வீதம் நெற்றியில் நீறுடன் சைவத் தமிழ்ப் பிள்ளைகளாக பாடசாலைக்கு வருகை தந்திருந்த மாணவ மாணவியருக்கு பௌத்த பாடம் போதிக்கப்பட்டது. பாடப் புத்தகங்களையும் புத்தம்புது இலவச உடைகளையும் வழங்கி ஆசை காட்டி இம் மாணவர்கள் பௌத்த மதத்துக்கு இழுக்கப்படுகின்றனர். நவரத்தினம், அகிலாண்டேஸ்வரி இராமநாதன், இராசமணி போன்ற பெயர்களையுடைய சைவத் தமிழ் பிள்ளைகள் பௌத்த மதமாற்றம் செய்யப்பட்டனர்.

இப் பாடசாலைகளில் பயிலும் தமிழ்ப் பிள்ளைகள்

(9ம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்பு எம். பி.யின் பிரேரணைகள்

● அரசாங்கத்திலுள்ள சகல வெற்றிடங்களும் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

● மண்முனைப்பால வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

● வெள்ள வெளி - மண்டூர் பாதையிலுள்ள மரப்பாலங்கள் அனைத்தும் கொங்கிறீற்று பாலங்களாக்கப்பட வேண்டும்.

● மண்டூரில் கிராம வைத்தியசாலையும் - மகிழத்தீவில் மருந்தகத்திற்கு மருத்துவமனையொன்றும் நிறுவப்படவேண்டும்.

மேற்கண்ட பிரேரணைகளை பட்டிருப்பு எம். பி. திரு. இராசமாணிக்கம் இம்மாதம் மந்திரி சபையில் கொண்டு வருகிறார்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நமது தொடர்கதை

## (அத்தியாயம் 5)

தனக்குரிய நன்மைகளையே எண்ணும் பண்பு மனிதரிடத்தில் மட்டுமன்றி விலங்கு முதலிய தாழ்ந்த உயிரினங்களிடத்தும் காணப்படுகின்றது. ஆனல் மனிதன் தன் நன்மையுடன் பிறர் நன்மையையும் சேர்த்து விரும்புகிருன். இது என்றும் எல்லா வேளையும் பொருந்தும் ஒன்றல்ல. சிலரிடம் சிலவேளை காணப்படும் பண்பு.

திடீரென அங்கு வந்து நின்ற சுவர்ணுவின் கணவன் அருமைநாயகத்தைக் கண்டதும் தன்நிலைமையை மட்டும் உணரவில்லை, தன்னுடன் சேர்த்து கீதாஞ்சலிக்கும் என்ன நடக்குமோ என எண்ணி வேதனைப்பட்டான். ஆனல் அங்கே—

''ஓ... ஐ... ஆம் சொறி'' என்று கூறிவிட்டு திரும்பிச் சென்ருன் அருமைநாயகம்'

''கீதா...'' என்று அவளைப் பார்த்தான் பிரகாஷ்.

'பயப்படாதீர்கள். அவர்களும் ஆரம்ப நாட்களில் இப்படித்தானே நடந்திருப்பார்கள். நீங்கள் போய் வாருங்கள் பிரகாஷ்' என்ருள்.

அவன் வெளியேறும் வரை வெளிவிருந்தையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் அருமைநாயகம்.

'ஏன் நீங்கள் படம் பார்க்கப் போகவில்லையா?' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள் கீதாஞ்சலி.

'எனக்கு படத்துக்குப் போகப் பிரியமில்லை. சுவர்ணுவையும் குழந்தைகளையும் விட்டு விட்டு நண்பன் ஒருவனைச் சந்தித்துக் கொண்டு இங்கே...'

'அது சரி இங்கே நடந்த விடயம்'

'சுவர்ணுவிடம் சொல்ல மாட்டேன்' என்று கூறிவிட்டுச் சிரித்த அருமைநாயகத்துடன் சேர்ந்து சிரித்தாள் கீதாஞ்லி.

மறுநாட்காலை கல்லூரிக்குச் சென்ருன் பிரகாஷ். அவனுக்கு வீட்டிலிருந்து ஓர் தந்தி வந்திருந்தது. அதைப் பிரித்துப் படித்த பிரகாஷ் உடனே கல்லூரி அதிபரிடம் லீவுக்கு எழுதிக் கொடுத்து விட்டுப் புறப்பட்டான்.

அவன் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தாலுயினும் அவன். மனம் அவனுக்கு முன்சென்று வீட்டிலிருக்கும் தாயையும், தங்கையையும் பார்த்துக் கொண்டது.

பிற்பகல் இரண்டு மணிக்கே வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டான் பிரகாஷ். அவனுடைய ஊர் பளை. தொழிலுக்காக பெற்ற தாயையும் ஒரே தங்கையான சுகுணுவையும் விட்டுப் பிரிந்து திருமலையில் தங்கியிருந்தான். தாய்க்கு சுகயீனம் என்று சுகுணு தந்தி கொடுத்திருந்ததைப் பார்த்து விட்டே ஓடோடியும் வந்திருந்தான்.

'வந்திட்டியாப்பா. உன்னைக் காணுமல் கண்ணை மூடி விடுவேனே என்று பயந்து கொண்டேயிருந்தேன்.' என்ருள் அவன் தாய் புவனம்.

"அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். நீங்களிருந்து தங்கையின் திருமணத்தைப் 'பார்த்துவிட்டுத்தான் போகப் போகின்றீர்கள்' என்ருன்.

'அண்ணு, நீங்கள் வேறு அம்மா மனதில் அந்த ஞாபகத்தை தூண்டாமலிருங்கள். ஏற்கனவே இதே பல்லவியைத்தான் அம்மா பாடிக் கொண்டிருக்கின்ருள்.'

'ஏன் அம்மா நான் ஒருவன் இருப்பதை மறந்து போனீர்களா?' என்ருன் பிரகாஷ்.

'இல்லையப்பா. உன் மாமன் தன் பிள்ளைக்குத் தானே இவளைக் கட்டி வைப்பதாகக் கூறினன். இப்ப என்னடா வென்ருல் உன்னுலே பத்தாயிரம் ரொக்கம் தரமுடியுமா? என்று கேட்டான்.'

'நீங்கள் என்னம்மா சொன்னீர்கள்.'

'எவ்வளவோ கேட்டேன். மறுத்து விட்டுப் போய் விட்டான். வேறு எங்கோ கல்யாணப் பேச்சு...' என்று கூறி விட்டு இருமினுள்.

'அம்மா, நான் மாமாவைப் பார்த்து விசாரித்துக் கொண்டு வாறேன்' என்று கூறிவிட்டு எழுந்து சென்ருன்.

அரைமணி நேரம் கழித்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான் பிரகாஷ். அவனுடைய இதயம் புண்ணுகிப் போயிருந்தது. அவன் கூட மாமனுடைய மகனுக்கும் தங்கை சுகுணுவுக்கும் திருமணம் நடக்கும் என்ற துணிவினுல் அந்த நினைவையே மறந்து போனுன். ஆனுல் அன்றைய சம்பவம் அவன் மனதில் பெரும் பாறுங்கல் ஒன்றைத் தூக்கி வைத்து விட்டது.

"என்னப்பா... போன காரியம்?' என்ருள் தாய் புவனம்.

'உங்களிடம் என்ன சொன்னுரோ அதையே தான் எனக்கும் சொன்னுர். நீங்கள் ஏனம்மா இதற்காகப் பயப்படுகின்றீர்கள் நான் இருக்கின்றேன். தங்கைக்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைக்க மாட்டேனு, என்ன?' என்ருன் பிரகாஷ்.

'அம்மா சுகுணு' என்ருள் புவனம்.

அவளால் மீண்டும் ஏதும் பேச முடியவில்லை. அவன் கையில் கொடுத்தாள்.

'என்னம்மா இது? இப்ப...' என்ருன் பிரகாஷ்.

'பிரகாஷ். உண்மையில் என்னை அவர் கூப்பிடுகின்ருர். நான் இனி...பிரகாஷ்.. உன் தங்கையை... நீ...கை... விட்டு விடாதேயப்பா...'

'அம்மா. அம்மா' தமயனும், தங்கையும் சேர்ந்து குரல் எழுப்பினர். என...க்...கு... கொஞ்சம் தண்ணீர்...' என்ருள்.

உடனே ஓடிச் சென்று பால் கொணடு வந்தாள் சுகுணு அவளை மார்புடன் தூக்கி அணைத்தவாறே பாலைப் பருக்கினுன் பிரகாஷ்.

'அதோ... அவர்... உங்கப்பா... என்னை.' என்றவள் மறுவார்த்தை ஏதும் இன்றி விழிகளை மூடிக் கொண்டாள்.
[illegible]
திறக்கவே இல்லை. கதறினர் பிரகாசம், சுகுணுவும்.

சுகுணு அண்ணன் பிரகாசுடன் திருமலைக்கே குடிவந்து விட்டாள். தாயுடைய கடன்களை நிறைவேற்றிய பின் ஊரில் தங்கையைத் தனியே விட்டு விட்டு வர விரும்பாத பிரகாஷ் அவளையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்.

பணத்தை மதிப்பவர்களும் தமது சுயகௌரவங்களை அடக்கி ஒடுக்கி வாழ்வதிலேயே செலவிட்டு குணமுடையோரையும், அறிவுடையோரையும் அவமதித்து வாழ்வதை எண்ணி அதிர்ச்சி அடைந்தான் பிரகாஷ்.

புவனம் இறந்ததற்குக் காரணம் தன் மாமனுடைய நம்பிக்கைத் துரோகமான செயல் என்பதை மறக்கவில்லை பிரகாஷ். அவனுடைய உள்ளம் அந்தக் கொடூரச் செயலை நினைத்து வருந்திக் கொண்டிருந்த போது தான் அங்கே வந்தார் விதானையார் தம்பாபிள்ளை.

'வாருங்கள். ஏது இந்தப் பக்கம்?' என்று வரவேற்ருன் பிரகாஷ்.

'சும்மா வந்தேன். உங்களையும் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்' என்று கூறியவர் சுகுணுவின் கல்யாணப் பேச்சை எடுத்தார்.

'ஓ... சரி சரி எனக்கு நீங்கள் வந்ததன் நோக்கம் புரிகின்றது' என்ருன் பிரகாஷ்.

'தம்பி சொல்லுகிறேனே என்று கோபிக்காதே. உங்கள் சொத்துக்களையும் கொடுத்து ஒரு ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு நோட்டுத் தா. நான் சரிப்படுத்தி விடுகின்றேன் உன் மாமனை' என்ருர்.

'நீங்கள் ஊரில் பெரிய மனிதன் என்றதால் சொல்லுகின்றேன். நீங்கள் சொல்லுகின்றபடி செய்ய நான் தயார் ஆனல் அவர் சம்மதிக்க வேண்டுமே.'

'தம்பி... உனக்கு உள்ளதைச் சொன்னுல் என்ன. உன் தாயார் இறந்ததற்குக் காரணமே தான் என்று தான் கொம்மான் நினைக்கிருர். ஆகவே தான் அவரே இப்படிச் சொல்லி என்னை அனுப்பினுர்.' என்ருர்.

'அப்படியாவிடயம். இந்த நல்லமனம் அன்று அவருக்கு இருந்திருந்தால் என் அன்னை இப்படி அரை மனத்துடன் அவலமாய் செத்திருக்க வேண்டாமே; ஏதோ சுகுணு சந்தோஷமாய் இருந்தால் அதுவே போதும்' என்று கூறிவிட்டு சுகுணுவை அழைத்தான்.

'என்ன அண்ணு' என்று கேட்டுக் கொணடே வந்தாள்.

'கேட்டியா விடயத்தை. மாமா...'

'எல்லாம் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். அண்ணு நீங்கள் பெரியவர்கள் நான் சின்னப்பெண் சொல்லுகிறேன் என்று கோபிக்கக் கூடாது. எனக்கு உண்மையிலேயே மாமாவீட்டிற்கு இனி பெண்ணுகப் போக விருப்பமில்லை. என் அம்மாவின் ஆத்மா சாந்தி பெறவேடுமானுல் நான் சந்தோஷ வாழ்வு வாழனும். இனிமேல் மாமா வீட்டில் நான் போய் சந்தோஷமாக வாழ்வேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா அண்ணு' என்று அவள் கேட்டு விட்டு கண் கலங்கினுள்.

'சுகுணு நீ என்ன சொல்லுகிருய? உனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கவில்லையா?'

'நாங்கள் விருப்பமாகத் தான் இருந்தோம். நானும் விரும்பித்தானிருந்தேன். ஆனுல் என் தாயை எமனுலகுக்கு அனுப்பிய அதே திருமணம் எனக்கு வாழ்வளிக்குமா அண்ணு? நான்ஓர் குடிசையில் ஓர் ஏழையுடன் வாழ்ந்தாலும் மகிழ்ச்சியோடு வாழ்வேன். அண்ணு. ஆனுல் அந்தச் சீமான் வீட்டு வாழ்க்கை எனக்குத் தேவையில்லை. எனக்கு என்று ஒரு வாழ்க்கையில்லாமலா போய்விடும். அப்படித் தானில்லாவிட்டாலும்நான் காலம் முழுதும் கன்னியாகவே வாழ்ந்து விட்டுப் போகின்றேன். ஆனுல் என் மாமன் வீட்டிற்கு போக நான் தயாராய் இல்லை'

'சுகுணு இது என்ன சிறுபிள்ளைத் தனமான பேச்சு. நீ...நீ...' என்று கண்கலங்கினுன் பிரகாஷ்.

'நானிருப்பது உனக்கு கஸ்டமா அண்ணு'

'சுகுணு...சே...இதென்ன வார்த்தை'

அப்படியாயின் நான் சந்தோஷமாயிருப்பதை நீங்கள் விரும்பினுல் என்னை அங்கே அனுப்பும் திட்டத்தை இன்றைக்கல்ல என்றைக்கும் மனதில் வைத்துக் கொள்ளாதே' என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.


இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர் எதுவுமே பேசவில்லை.

மறுநாள் வழக்கம் போல கல்லூரிக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய பிரகாஷ் ரியூசனுக்காக கீதாஞ்சலியின் வீட்டுக்குச் சென்ருன்.

பல நாட்களாக அவன் வராததால் அவனுடைய வீட்டுக்குச் சென்று ஏமாற்றமடைந்த கீதாஞ்சலி அன்று அவனைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து துள்ளினுள். அவளால் பாடங்களைப் படிக்க முடியவில்லை.

பிரகாஷ் என்ன இது. சும்மா இயந்திரம் மாதிரி இயங்குகின்றீர்களே இது நாள் வரை எங்கே போனீர்கள்? ஏன் வரவில்லை. அன்று இங்கு நடந்த நிகழ்ச்சியினுல் பயந்து...'


(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு
# இசைக் கலைஞர்
## ஏ. கே. கருணாகரன்

இன்றைய ஈழத்து இசைக் கலைஞர்களில் மின்னல் வேகத்தில் முன்னுக்கு வந்து தன்னுடைய இனிமையான சாரீரத்தாலும் சங்கீத ஞானத்தாலும் இயல்பாக தமக்கேயுரிய அடக்கம் அமைதி ஆகிய பண்புகளாலும் ஆயிரக்கணக்கான இசை இரசிகர்களை கொள்ளை கொண்டுள்ளவர் இளைஞர் ஏ. கே. கருணாகரன். வித்துவக் காய்ச்சல் என்பது இவரிடம் சிறிதும் கிடையாது. இசைத்துறையில் எதிர்காலத்தில் ஈழத்தின் பெருமையை உயர்த்தவிருக்கும் இந்த இளைஞரின் பேட்டியை மற்ற எல்லாப் பத்திரிகைகளையும் முந்திக்கொண்டு வெளியிட்டு வாசகர்களுக்கு அளிப்பதில் சுதந்திரன் மகிழ்ச்சி அடைகிறது. சுதந்திரனுக்காக இப்பேட்டியை நடத்திய நெல்லை க. பேரனுக்கும் நமது நன்றி. சரி இதோ பேட்டியை படியுங்கள்!



**இசைத்துறையில் உங்களுக்கு ஈடுபட வேண்டும் என்ற ஆவல் எப்போது ஏற்பட்டது?**

ஆரம்ப காலத்தில் எனக்கு மெல்லிசைப் பாடல்களிலேயே கவர்ச்சி ஏற்பட்டது. அப்போது எனக்கு 10 வயது இருக்கும். சினிமாப் பாடல்களும், வானொலியில் ஒலிபரப்பப்படும் கர்நாடக சங்கீதமும் என்னை மிகவும் கவர்ந்தன. சிறு வயதில் மெல்லிசைக்கும், கர்நாடக சங்கீதத்திற்கும் தரம்பிரித்து உணரமுடியாத நிலையில் இருந்தேன். பிறகு எனது ஆர்வத்தை உணர்ந்த பெற்றோர் இசைத்துறையிலேயே என்னை முற்றாக ஈடுபடுத்தவேண்டும் என்று விரும்பினார்கள். இதுதான் எனது ஆரம்பம் என்பேன்.

**கர்நாடக சங்கீதத்தை ஆரம்பத்தில் எங்கே கற்றீர்கள்? அதாவது ஆசிரியர்களை அல்லது கல்லூரிகளைச் சொல்லமுடியுமா?**

ஆரம்பத்தில் நெல்லியடி அரசினர் மத்திய மஹா வித்தியாலயத்தில் நான் கல்வி கற்கும்போது சங்கீத பூஷணம் சோமசுந்தரம், கீதாஞ்சலி வி. கே. நல்லையா, சங்கீதபூஷணம் நல்லூர் எஸ். கோவிந்தராஜன் ஆகியோரிடம் சங்கீதத்தை ஒரு பாடமாகப் பயின்றேன். அதைத் தொடர்ந்து இராமநாதன் இசைக் கல்லூரியில் மகாராஜபுரம் சந்தானம் அவர்களிடமும் பின்னர் சென்னை கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் பட்டப்படிப்புகளும் படித்துள்ளேன்'

**நெல்லியடி மத்திய மஹாவித்தியாலயம் தான் உங்களுடைய வளர்ச்சிக்கு ஆரம்பக்களமாக அமைந்தது என்று சொல்கிறீர்கள்?**

ஆமாம். எனது பழைய கல்லூரியையும் அதன் ஆசிரியர்களையும், அப்போது அதிபராக விருந்த ஏ. ரி. சபாரத்தினம் அவர்களையும் எனது பாடல்களுக்குக் கரகோஷம் செய்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த சக மாணவ நண்பர்களையும் என்னால் மறக்கவே முடியாது. மேலும் இக்கல்லூரியில் படித்த நாட்களில் மாகாணரீதியாகவும் அகில இலங்கை ரீதியாகவும் நடைபெற்ற பல சங்கீதப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளேன்.

**தமிழகத்தில் கர்நாடக சங்கீதம் பயின்றபோது உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்களைச் சொல்லமுடியுமா?**

ஒரு சமயம் சென்னையில் குரு மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் வீட்டில் சங்கீதபூபதி திரு. மகாராஜபுரம் விஸ்நாதஐயர் அவர்கள் முன்னிலையில் பாடும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர் எனது இசையை மெச்சி, 'பையன் பிழைச்சுடுவான்' என்று ஆசி வழங்கினார்; முன்னுக்கு வரக்கூடிய பையன் என்று அங்கிருந்த அனைவரிடமும் சொன்னார். அந்தச் சம்பவத்தை என்னால் மறக்க முடியாது.

**கர்நாடக சங்கீதம் 'தெலுங்கிலேதான் அதிகளவு வளர்ந்திருக்கிறது' என்று நான் கருதுகிறேன். இதைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

இந்தக்கேள்விக்குப்பதில் சொல்வதுகொஞ்சம் பிரச்சினைதான். ஆனாலும் எனது அறிவுக்கு எட்டியவரையில் சொல்லப்போனால் அக்காலத்தில் தெலுங்கு உருப்படிகளை இயற்றிய மகான்கள் சங்கீதத்திலும் மிக முதிர்ச்சியடைந்தவர்கள், இதனால் அவர்களது தெலுங்கு உருப்படிகளைப் பாடும்போது சங்கீதம் தரத்தில் மிக முன்னணி வகித்தது. அதே சமயத்தில் தமிழில் ஒரு சிலரைத் தவிரப் பாடல்களை இயற்றிய புலவர்களுக்குச் சங்கீத சம்பந்தமாக அவ்வளவு தெரியாமல் இருந்தபடியால் சில தமிழ்ப் பாடல்களில் சங்கீதச்சுவை காணப்படவில்லை. அதற்காக முற்றிலும் தமிழிசை வளரவில்லை என்று கூறுவதற்கில்லை. தற்போது அதுவும் நிறைய வளர்ச்சி பெற்றுள்ளது.

**உங்களுடைய இசைக் கலைக்கு ஊக்கமளித்து வரும் சாதனங்களைப் பற்றிச் சொல்லமுடியுமா?**

சென்னையில் பல சபாக்களில்பாடினேன். சென்னை வானொலியிலும் பாடிக் கொண்டிருக்கிறேன். அதே போல் எங்கள் ஈழநாட்டிலும் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளுக்கு ரசிகர்கள் திரண்டு வருகிறார்கள். மக்களும் நிறைய ஆதரிக்கிறார்கள். இதை இலங்கை தியாகராஜ கான சமாஜத்தின் இசை விழா நிகழ்ச்சிகளிலும் சமீபத்தில் உள்நாட்டுஇறைவரித் திணைக்களத்தினர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய முத்தமிழ் விழாவின் போதும் என்னால் காணமுடிந்தது. இது போலவே அனேக நிகழ்ச்சிகளில் ஈழத்துக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு ஊக்கம் பெற்று வருகிறார்கள்.

**பொதுவாக கர்நாடக இசையில் உங்களுக்குப் பிடித்தமான சில இராகங்களைக் கூற முடியுமா?**

எல்லா இராகங்களுமே மிக நல்லவைதான். அவற்றுள் எனக்கு பேகடா, மோகனம், கீரவாணி, சங்கராபரணம் போன்றவை மிகவும் பிடித்தமானவை,

**உங்களுக்குப் பிடித்தமான இசைக்கலைஞர்களைச் சொல்லுவீர்களா?**

செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர், எம். டி. இராமநாதன் ஆகியோர் தற்போது எனக்குப் பிடித்த மானவர்கள்.

**உங்களுடைய இசைக் கலைக்கு உரமூட்டும் பக்கவாத்தியக் கலைஞர்களைப் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே...**

அதை நீங்கள் கேட்காத போதும் நானே சொல்ல வேண்டுமென்றிருந்தேன். ஒரு கச்சேரிக்கு பக்கவாத்தியக்கலைஞர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடில் அது நன்றாகவே சோபிக்காது. ஒரு கச்சேரிக்கு அதில் பங்கு கொள்ளும் கலைஞர்கள் அனைவருமே முக்கியமானவர்கள். [illegible] கலைஞர்களின் நல்ல ஒத்துழைப்புத் தருகிறார்கள்.

**கலைஞர்களைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

கலைஞர்கள் பொதுவாக மக்களை மகிழ்விக்கும் ஒரு நிலையில்த்தான் இருக்கிறார்கள். பலவித தொல்லைகளுக்கு மத்தியிலும் கலை நிகழ்ச்சியைக் கேட்கும் போது மனிதன் தன்னை மறந்து இன்பமடைகிறான். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கலைஞர்கள் தங்களுக்குள் போட்டி, பொறாமை முதலியவற்றை விட்டுத் தாம் தாம் சம்பந்தப்பட்ட கலைகளை மேன்மேலும் உயர்த்தி எமது சமுதாய ஈடேற்றத்திற்காகவும் மக்களின் பொது வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் உழைக்க வேண்டும் என்பதே என் ஆசை.

**இன்று 'கர்நாடக சங்கீதம்' என்ன நிலையில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா?**

ஆம். அமெரிக்கா. போன்ற வெளிநாடுகளிலுள்ளவர்களும் மதிக்கும் அளவிற்குக் கர்நாடக இசை, பரதநாட்டியம் என்பன வளர்ச்சியடைந்துள்ளன. அங்கிருந்து பலர் இந்தியாவிற்கும் வந்து இக்கலைகளைக் கற்பதோடு மாத்திரமன்றிப் பண்பாட்டிலும் மிக ஊறிப் புதிய மனிதர்களாகத் திரும்புகிறார்கள். இதை நான் நேரிலேயே உணர்ந்தேன். இது போலவே பல இந்தியக் கலைஞர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று நமது இசைக் கலைக்கு உலகப் புகழ் தேடிக் கொடுத்துள்ளார்கள்.

(9ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

## நந்திக் கடல்

விலை: ரூபா இரண்டு.
ஆசிரியர்: செங்கைஆழியான்.
வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

வரலாற்று நாவல்களை பத்திரிகைகளின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாக்கி விட்டு 'கல்கி' மறைந்தார். தமிழகத்திலும், ஈழத்திலும் இதனால் வரலாற்று நாவல்கள் பல எழுந்தவண்ணமிருந்தாலும், ஈழத்தில் இதன் எண்ணிக்கை மிகச் சொற்பமாகவே இருக்கின்றது.

பாரதத்தின் வரலாறு மிகப் பரந்ததாகவும், பல இன, மொழி, மதவேறுபாடுகளைகொண்ட சமுதாய அமைப்புகளை இணைப்பாகக் கொண்டதாகவுமிருப்பதால் வரலாறு நாவல்கள்பல எழ ஏற்ற வரலாற்றுப் பின்னணிகள் காணப்படுகின்றன. ஆனால்— ஈழத்தின் நிலை அப்படியில்லை. ஈழம் ஒரு சின்னஞ்சிறிய தீவு. அதன் வரலாற்றுச் சாதனங்கள் பல உறுதியாகவோ உண்மையாகவோ இன்றுவரை வரையறை செய்யப்படவில்லை. வரையறை செய்யப்பட்டவைகளில் பலவற்றில் இன்றைய அரசியல் கலப்புக்கள் மிகுதியாகக் கலந்துவிட்டன. இதனை வரலாற்று நாவல்களில் மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்களின் பாடநூல்களிலும் அவதானிக்க முடியும், இந்த நிலையில்—

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள், நன்குணரப்பட்ட வரலாற்றுப் பின்னணிகளினடியாகவே, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் தத்தம் வரலாற்று நாவல்களைப் படைக்க முற்படுகின்றனர். இதனாற்றான்—

பலரும், பலவாறாக—நாடகம், சிறுகதை, காவியம் எனப் பலமுறை கையாண்ட 'சங்கிலி குமாரன் கதை' இங்கு நந்திக்கடலாக ஒரு புதிய கோணத்தில் பரந்து அலைமோதிச் சிறக்கின்றது.

வரலாற்று நாவல்கள் மூன்று முக்கிய இலைகளில் உருவாகின்றது எனலாம். சுவையான, கதைக்கேற்ற சம்பவங்களைச் சில வரலாற்றுக் காலகட்டங்கள் கொண்டிருப்பதால், அச்சம்பவங்களுக்காகவே சில நாவல்கள் எழுகின்றன. வரலாற்றின் சில பாகங்கள் நிறைவுசெய்யப்படாமலோ அன்றிச் சிற்சில காலங்கள் மூளியாகவோ கிடக்கும் வரலாற்றுப் பாதையை தமது ஆராய்வு நிறைந்த கற்பனைச் சிந்தனைகளால் நிறைவுசெய்யும் முயற்சியாகவும் வரலாற்று நாவல்கள் எழுகின்றன; தலைநிமிர்ந்து வாழ்ந்த சமுதாயம், நிலைகெட்டுச் சாயும் வேளையில், அவர்களிடையே மொழி, மத இன அடிப்படையில் ஒரு தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் நாவல்கள் தோன்றுகின்றன. அதாவது வரலாற்று நாவல்கள் ஒரு சமுதாயத்தின் சென்ற காலப் பரிசிலனை எனவும் கொள்ளலாம்.

இங்கும் இத்தகைய ஒரு நல்ல பணியையே நாவலாசிரியரான செங்கை ஆழியானும் செய்துள்ளார் எனலாம். வரலாற்றை வெறும் வரலாறாக மட்டும் சொல்லாது, தனது அழகிய, எளிய நடையிலே, பக்கத்திற்குப் பக்கம் விறுவிறுப்பேற்படும் வண்ணம் நாவலை நடாத்திச் சென்றுள்ளார்.

இந்த நாவலில் ஆசிரியர் தென்னகத்தின் சிறப்புமிக்க நாவலாசிரியரான 'சாண்டில்யனின்' போக்கைக் கையாண்டுள்ளார் என்பதனை சம்பவ அமைப்புக்களும், அத்தியாய இறுதிகளும் புலப்படுத்துகின்றன. இந்த உத்தி சாதாரண வாசகர்களைக் காந்தம்போல கவர்ந்திழுக்கும் பெற்றியதாகும். வீரம், சோகம், காதல், சூழ்ச்சி, என்று பல்வகைச் சுவைகளும் அத்தியாயங்களாக மிளிர்கின்றன.

ஆசிரியர் தமிழுணர்ச்சி, இனவுணர்ச்சி மிகப்பெற்றவராதலின், அந்த எழுச்சியினை, நூலின் ஒவ்வொரு பக்கங்களிலும் காணமுடிகின்றது.

தரமான 'கிளேஸ்' தாளில், நிறைந்த படங்களுடன் 124 பக்கங்களில், மூவர்ண அட்டையுடன் வெளிவந்துள்ள இந்த நூலின்விலை இரண்டே ரூபாய்தான் என்பதனை நம்ப மனம் ஆச்சரியப்படுகிறது. நிச்சயமாக ஒவ்வொரு தமிழனும் வாங்கிப்படிக்க வேண்டிய நூல். முக்கியமாக இன்றைய மாணவர்கள்—நாளைய நம்நாட்டு மன்னர்கள் இதைப் படிப்பதனை ஒரு முக்கிய தமிழ்ப் பணியாகக் கொள்ளவேண்டும். ஆசிரியரிடமிருந்து இதுபோன்ற பல நூல்களை வாசக உலகம் எதிர்பார்க்கிறது.

விமர்சகர்:
'ஜராதுஷ்டிரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் விளக்கைப் பிடித்தபடி கிணற்றுள் போய் விழுவதா?

## எண்ணம்

## சாந்தானும் வேதம் ஓதுகிறான்!

"ரஷிய நாட்டிலுள்ளது போன்று கல்வி நிர்வாகம் பிரதேச ரீதியாக அமைய வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வேண்டிய திட்டங்களைக் கையாளும் அதிகாரம் இருக்க வேண்டும்."

—இப்படிக் கூறியிருப்பது யாரோ ஒரு தமிழரசுக்கட்சிக்காரர் என்று நினைப்பீர்கள். அப்படி நினைத்து ஏமாந்துவிடாதீர்கள். கூறியிருப்பது யார் என்று அறிந்தால் மூர்ச்சித்து விழுந்துவிடப் போகிறீர்கள்.

தமிழ் காங்கிரசின் ஆயுட்காலத் தலைவர் சாட்சாத் திரு பொன்னம்பலமே "ஞானம் பெயர்ந்து" யாழ். நகரில் நடைபெற்ற ஆசிரிய சங்கக் கூட்டத்தில் இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இதைத்தான் தமிழரசுக்கட்சி கடந்த 20 ஆண்டுகளாகக் கூறி வருகிறது. தமிழ் பேசும் மக்கள் கல்வித்துறையில் மட்டுமல்ல—சகல துறைகளிலும் தங்கள் நிர்வாகத்தைத் தாங்களே கவனித்துக் கொள்ளவும், அதுபோல சிங்களவர்கள் தமிழர்கள் மீது குதிரைவிடாது அவர்களது அலுவல்களை அவர்களே கவனித்துக் கொள்ளவும் கூடிய முறையில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்று தமிழரசுக்கட்சி எடுத்துக் கூறி வருகிறது.

அதிகார பரவலாக்கப்படுவதற்கு ஒரே வழி—இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை அகற்றப்பட்டுச் சமஷ்டி அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தமிழரசார் அழுத்தமாகக் கூறி வருகிறார்கள்.

அதிகாரம் முழுவதும் மத்தியில் குவிந்திருப்பதற்கு ஒரே காரணம் இன்றைய அரசியலமைப்பேயாகும். எனவே தான் அதை மாற்றியமைக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி போராடி வருகிறது.

அதிகாரத்தைப் பரவலாக்கி ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வேண்டிய திட்டங்களைக் கையாளும் அதிகாரத்தைப் பெறுவதற்காகவே 1957-ம் ஆண்டு பண்டா—செல்வா ஒப்பந்தம் உருவாகியது. பிரதேச சபைத் திட்டம் கருவாகியது.

இதே நோக்குடன் தான் தேசிய அரசாங்கம் மூலமாக மாவட்ட சபை நிறுவுவதற்கும் தமிழரசுக்கட்சி பெருமுயற்சி செய்தது.

ஆனால்,......

அதிகாரப் பரவலுக்கு வழி வகுக்கும் சமஷ்டித் திட்டத்தை முழு மூச்சுடன் எதிர்த்து வருபவர் பொன்னம்பலம்!

ஒற்றையாட்சி முறைக்கு ஒத்தூதி வருபவர் பொன்னம்பலம்!

பிரதேசசபை நிறுவும் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை அழிப்பதற்கு யூ. என். பி.யுடன் சேர்ந்து சதி செய்தவர் பொன்னம்பலம்!

மாவட்டசபை மசோதா வரவிடாமல் நாசமாக்கிய பெருமையில் பெரும் பகுதியைத் தட்டிக் கொண்டவர் பொன்னம்பலம்!

தமிழரசுக்கட்சிக்குப் பெருமை ஏற்பட்டுவிடுமே என்ற காரணத்துக்காகப் பொறாமை பிடித்து நல்ல திட்டங்களை நாசமாக்கியவர் பொன்னம்பலம்!

மாவட்ட சபைகளுக்கு அதிக அதிகாரம் பெறுவதற்குத் தமிழரசார் எடுத்த முயற்சிகளுக்கு எல்லாம் முட்டுக் கட்டை போட்டவர் பொன்னம்பலம்! அப்படிப்பட்டவர் மாவட்டசபை மசோதாவில் கல்வி பரிபாலனத்துக்குப் போதிய இடம் இருந்ததா? இதை அவர்கள் நிரூபித்தால் மாவட்டசபை எதிர்ப்பைக் கைவிடுகிறேன் என்று வேறு வீரப்புப் பேசினாராம்!

சுவரைக்கட்டி எழுப்பவிடலாம் இடித்துத் தள்ளிவிட்டு அதில் சித்திரம் இல்லாததால் தான் அதை இடித்தேன் என்றால் அப்படிப்பட்டவனை முட்டாள் என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது?

அதேபோலத் தமிழரசார் கட்டியெழுப்ப முயன்ற மாவட்டசபை எனும் சுவரைப் பொறாமை பிடித்து இடித்துத் தள்ள உதவிய அரசியல் முட்டாளான திரு. பொன்னம்பலம் கேட்கிறார்—கல்வி பரிபாலன அதிகாரம் மசோதாவில் இருந்ததா என்று!

சுவரைக்கட்டி யெழுப்பியிருந்தால் வேண்டிய சித்திரங்களை மெல்ல மெல்ல எழுதியிருக்கலாமல்லவா? சுவரைக் கட்டியெழுப்ப விடமல் தடுத்தவர்கள் இன்று கேட்கிறார்கள் அதில் சித்திரம் இருந்ததா என்று!

மாவட்டசபை மசோதாவில் கல்வி பரிபாலன அதிகாரம் சேர்க்கப் படவேண்டுமென்று வாதிடுவது வேறு. மாவட்ட சபைகளே வேண்டாமென்பது வேறு.

திரு. பொன்னம்பலம் மாவட்டசபை நிறுவும் அடிப்படைத் திட்டத்தையே எதிர்த்தார். அதிகாரம் போதியளவு தரப்படவில்லையென்ற காரணத்துக்காக மாவட்ட சபை மசோதாவை அவர் எதிர்க்க வில்லை. மா. சபைகளுக்கு அதிகாரம் கூடுதலாக வேண்டும் என்று அவர் அரசாங்கப்பாராளுமன்றக் குழுவில் ஒரு நாள் கூட வாதிட்டதாக நாம் அறியவில்லை. இன்னும் சொல்லப் போனால் அரசாங்கம் மாவட்ட சபைகளுக்கு வழங்குவதற்கு முன்வந்த பல அதிகாரங்களைக் கிடைக்காமல் செய்வதிலேயே திரு. பொன்னம்பலம் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பது ஊரறிந்த உலகறிந்த இரகசியமாகும்.

மாவட்டசபை மசோதாவில் கல்வி பரிபாலனம் பற்றிய அதிகாரம் இல்லாததால் தான் தாம் அதை எதிர்த்ததாக திரு. பொன்னம்பலம் கூறுவாரானால் நாம் அவரிடம் கேட்க விரும்புவது இதுதான்:

1957-ம் ஆண்டு பண்டா—செல்வா ஒப்பந்தப்படி உருவாக இருந்த பிரதேச சபைகளுக்குக் கல்வி பரிபாலனம் பற்றிய அதிகாரம் அளிக்கப்பட ஒப்புக் கொள்ளப்பட்டிருந்ததே—அப்போது எதற்காக அதை எதிர்த்தீர்கள்?

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் கல்வி பரிபாலனம் மட்டுமல்ல—மற்றும் சகல துறைகளிலும் வேண்டிய திட்டங்களை கையாளும் அதிகாரத்தை இன்றைய ஒற்றையாட்சியின் கீழ் பெற முடியாது. சமஷ்டி ஆட்சியின் கீழ் தான் இதைச் சாதிக்க முடியும். எனவே ஒற்றையாட்சியை மாற்றியமைத்து பிரதேச சுயாட்சியை அல்லது சமஷ்டி ஆட்சியை அமைக்கும் திட்டத்துக்கு எதிர்காலத்திலாவது திரு. பொன்னம்பலம் ஆதரவு தருவாரா? ரஷிய நாட்டிலிருப்பதும் சமஷ்டி ஆட்சி அமைப்பே என்ற உண்மையை உணருவாரா?

திரு. பொன்னம்பலத்தின் அரசியல் போக்கிலிருந்து தெரிவது என்ன? நாட்டுக்கு—இனத்துக்கு நன்மையளிக்கும் திட்டம் என்று உள்ளூர அவருக்கு தெரிந்தாலும் தமிழரசுக்கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காக நல்ல திட்டங்களையும் நாசமாக்கி வருகிறார் என்பதுதான். அதில் ஒன்றுதான் பிரதேசசபை மாவட்டசபைத் திட்டமாகும்.

திரு. பொன்னம்பலம் ஈழத்தமிழக அரசியலில் ஒரு சாத்தான். இந்தச் சாத்தான் இப்போது வேதம் ஓதிப் பார்த்திருக்கிறது.

இந்தச் சாத்தானுக்கு தமிழக அரசியலிலிருந்து சீட்டுக் கிழிக்காதவரை தமினம எந்த உரிமையையும் பெற [illegible] என்பது நிச்சயமாகி விட்டது.

[illegible] சாத்தான் சாத்தான்தான். இந்த உண்மையை உணர்ந்து தமிழ் மக்கள் புத்தி பூர்வமாக நடந்து கொள்வார்களாக.

## ஆங்கிலேயன் இனமாற்றம் செய்யவில்லை; சிங்களவர்கள் அதற்கே துடிக்கிறார்கள்!

(1ம் பக்கம் தொடர்ச்சி)

தமிழ்ப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளின் பெற்றோர் சங்கங்களும், ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களும் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரியிருப்பதையொட்டி தமிழரசுக் கட்சியின் அபிப்பிராயத்தை அறிய சுதந்திரன் நிருபர் முயன்றபோதே மேற் கண்ட கருத்துக் கிடைத்தது.

தமிழரசுக் கட்சியின் சிரேட்ட தலைவர் ஒருவர் தமிழ் பாடசாலைகளில் சிங்கள போதனை பற்றி மேலும் கூறியதாவது:—

சிங்களவர்களும் தமிழர்களும் இந்நாட்டில் சமத்துவமாக வாழ்வதற்கும், தமிழினத்தின் தனித்துவம் அழியாது பாதுகாக்கப்படும் என்பதற்கும்பத்திரமான உத்தரவாதம் கிடைப்பதற்கு முன் தமிழ் மக்கள் சிங்களத்தை படிப்பது நிச்சயம் இன அழிவில் தான் கொண்டுபோய் விடும்.

இன்று தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழி தமிழாகவே இருக்கும் என்ற கொள்கையிலிருந்து அரசாங்கம் நழுவ முயற்சிக்கிறது. பெற்றோர் விருப்பம் என்ற போர்வையில் சிங்களத்தை தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழியாக்க சூழ்ச்சி செய்கிறார் கல்வியமைச்சர். ஆகவே முதலில் போதனா மொழிப் பிரச்சினை ஐயத்துக்கிடமின்றி தீர்க்கப்பட வேண்டும். தமிழினம் இந் நாட்டில் தொடர்ந்து தமிழினமாக வாழ்வதா அல்லது சிங்கள இனமாக மாறுவதா என்ற கேள்விக்கு பதிலே இப்பிரச்சினையில்தான் தங்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல —தமிழர்களின் மொழிப்பிரச்சினை இன்னும் பூரணமாகத் தீர்க்கப்படவில்லை. தமிழரசுக்கட்சியின் தலைமையில் தமிழ்ப் பேசும் மக்கள் நடத்திய போராட்டத்தின் பயனாக உருவாகிய தமிழ்மொழிச் சட்டமும் சட்ட விதிகளும் வடக்குக் கிழக்கில் தமிழை நிர்வாக மொழியாக்க வழி வகுத்திருக்கின்றன. ஆனால் அந்த சட்ட விதிகளைக்கூட செம்மையாக — முறையாக அமுல் நடத்தி தமிழினத்தின் மொழியுரிமையை அங்கீகரிக்காது சிங்கள ஆட்சியாளர்கள் தனிச் சிங்களத்தையே மேலும் மேலும் தமிழினத்தின் தொண்டைக்குள் திணிக்க முயற்சிக்கிறார்கள்.

சட்டரீதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட தமிழ் மொழி உரிமைகளையே இன்று வழங்கமறுத்து தனிச் சிங்களத்தை திணிக்க முயலும் ஆட்சியாளர்கள், தமிழர்கள் அனைவரும் சிங்களம் படித்து விட்டார்கள்—அனைவருக்கும் சிங்களம் தெரியும் —என்ற நிலை உருவாகிவிட்ட பின்னர்மருந்துக்குத்தானும் ஆட்சித்துறையில் தமிழுக்கு இடந்தருவார்களா என்பதை தமிழ் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதுமட்டுமல்ல — 1958ம் ஆண்டு திரு. பண்டாரநாயகா கொண்டு வந்து நிறைவேற்றிய தமிழ்மொழி விசேட சட்டத்தைக்கூட— தமிழர்கள் அனைவருக்கும் சிங்களம் தெரியும் என்றநிலை ஏற்பட்ட பின்னர் — நிராகரித்து விடுவதற்கு ஆட்சியாளரால் முடியும். தமிழர்கள் அனைவரும் சிங்களம் படிக்கும்வரை—ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே தமிழுக்கு சலுகையளிப்ப தென்றும் அதன் பின்னர்நாடுமுழுவதும் தனிச் சிங்களம் கோலோச்ச வேண்டுமென்பதுமே தமது கட்சியின் கொள்கையென சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே எப்படியும் ஒரே இனம் — ஒரே மதம் — ஒரே மொழி என்ற தமது இலட்சியத்தை அடைவதிலேயே சிங்களக் கட்சிகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. இந்த நிலையில் தமிழர் சிங்களம் படிக்க நினைப்பது கையில்விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போன்ற செயலாகும். தமிழர் சிங்களம் படிப்பது நாடு முழுவதும் ஒரே மொழி ஒரே இனம் என்ற இலட்சியத்தை சுலபமாக நிறைவேற்றுவதற்கு சிங்களக் கட்சிகளுக்கு ஒருவாய்ப்பாகிவிடும்.

ஆங்கிலம் படித்தோமே—ஆங்கிலேயராகி விட வில்லையே—அதுபோல சிங்களம் படிப்பதால் எப்படி சிங்களவராகி விட முடியும் என்று கேட்கிறார்கள் சிலர். இது அர்த்தமற்ற விளங்காத வாதமாகும்.

ஆங்கிலேயன் இந்நாட்டை ஆண்டபொழுது ஆங்கிலேயர்கள் இந் நாட்டில் பெரும்பான்மையோராக இருக்கவில்லை. ஆங்கில

(9ம் பக்கம் பார்க்க)

## சைவ சோதி மறைந்தது!

மட்டக்களப்பிலே சாதாரண தமிழாசிரியராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கித் தமது ஆசார சீலத்தினாலும், அறிவுத் தாகத்தினாலும், தேசிகமணியாக, சைவப் புலவராக, சைவ மெய்ப் போதகராக, பிரசங்கமணியாக, நூலாசிரியராக, சைவக் களஞ்சியமாக விசேட சிறப்புடன் விளங்கிய அருணாசல தேசிகமணி என்னும் சைவ சோதி மறைந்துவிட்டது.

தமது ஆயுட்காலத்தில் அறுபது ஆண்டுகால சேவையைத் தமிழுக்கும், சைவத்துக்குமாக அர்ப்பணித்த தேசிகமணியை நாடு முழுதும் நன்கறியும். மட்டக்களப்பில் அவர் போகாத கிராமமுமில்லை. அவரை அறியாத மக்களுமில்லை. சிறு பிள்ளையும் அவரை அறியும். அவரது பிரிவில் சைவ சமூகம் மிகவும் மனமுடைந்து வருந்தி நிற்கின்றது. அவரை வாழ்த்தித் தனது இறுதி அஞ்சலியைச் செலுத்துகிறது.

தேசிகமணி எல்லா வட்டாரங்களிலும் மதிப்புப்பெற்ற ஒரு நல்லறிஞர். நம்பிக்கைத் துரோகம் செய்யாமலும், சந்தர்ப்பவாதியாய் நடிக்காமலும், இரண்டுங் கெட்டானாய்ப் போகாமலும் நேர்மையான சைவ நன்மகனாக வாழ்ந்தமையால் கிறீஸ்தவ சமூகமும் அவரை நன்கு மதிக்கிறது;

பரந்த பொது நோக்குடன் எல்லாருடனும் இனிமையாகப் பழகும் பண்பினால் நாடு முழுவதும் அவரை கௌரவிக்கின்றது.

மட்டக்களப்பு நாட்டிலே தெய்வ நம்பிக்கையும், ஆசாரமும் சமய ஞானமும் வாய்ந்த ஒரு சைவ சமூகத்தை உருவாக்குவதற்குத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து தேசிகமணி ஆயிரம் பிறைகண்ட மனிதப் பழமாய், சதாபிஷேகம் கண்ட சான்றோராய் சைவத்தின் வடிவமாய் நம் கண்முன் தந்து நின்ற காட்சி மறைந்துவிட்டது.

மறைந்து சென்ற சைவசோதியின் ஒளி நாம் செல்லும் வழியை ஒளிபெறச் செய்து நிற்கின்றது. அந்த ஒளியின் வழியே சென்று நாமும் நமது சேவையில் நாட்டை மறுமலர்ச்சி பெறச் செய்வோமாக.

தமிழும் சைவமும் உள்ளளவும் தேசிகமணியின் நாமம் வாழ்க!

—புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தினம் கும்பலின் புதிய சூழ்ச்சி!

## தமிழரசுக் கூட்டத்தை முறியடிக்க மண்டைதீவில் நடந்த அயோக்கியத்தனம்!

### சுயாட்சிக் கழகமா? சூதாட்சிக் கலகமா? இவ்வாறு கேட்கிறார்கள் பொதுமக்கள்!

**ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு நாளிலும் பொழுதிலும் பெருகிவரும் செல்வாக்குக்கண்டு 'மூளை'யும் மூளையின் எடுபிடிகளும அஞ்சும்கெட்டு அறிவும்கெட்டு அலமந்து தவிக்கிறார்கள். இதனால் தீவுப்பகுதிகளில் தமிழரசுப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுவதை தடுத்துவிடும் நோக்குடன் கேவலமான முயற்சியில் இப்போது ஈடுபட்டு வருகிறார்கள். அண்மையில் மண்டைதீவில் தமிழரசுக்கூட்டம் நடைபெறாது தடுப்பதற்காக நவரத்தினததின் எடுபிடிகள் போட்ட சூழ்ச்சித்திட்டம் முறியடிக்கப்பட்டது.**

திரு. வி. நவரத்தினத்தின் சுயாட்சிக் கழகம் தோல்வியைக் கண்டு துரோகச் செயலில் இறங்கிவிட்டது. அதன் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது. தமிழ் அரசுக் கட்சியைத் தொலைத்து விடுவேன் என்று சபதம் செய்து பொய்ப்பதியில் புரட்டுக்களையும் பொய்களையும் எழுதித் துரோகத்தனத்தின் விசுவரூபத்தைக்காட்டி வரும் திரு. சி. த. சிவநாயகத்தின் ஈனச் செயல்களுடன் அவருடைய அரசியற் சீடன் வ. நவரத்தினம் கும்பலின் துரோகச் செயல் தீவிரமாகின்றன.

21.9.69 ல் தமிழரசுக் கட்சியின் மண்டைதீவுக்கிளை தீவுப்பகுதி வேட்பாளர் திரு கா. பொ. இரத்தினத்துக்கு ஒரு வரவேற்பு நல்க ஒழுங்கு செய்தது. இதனை அறிந்தவுடன் சூதாட்சிக் 'கலக'க் கும்பலின் மூளை வேலை செய்யத் தொடங்கிற்று!.

''மண்டைதீவிலே சூதாட்சிக்கலகத்துக்குப் பேராதரவு இருக்கின்றதென்று முதலாவது கிளையைத் தொடக்கினோம்; முதலாவது பொதுக் கூட்டத்தையும் நடத்தினோம். ஆட்கள் சேரவில்லை; மூடிமறைத்து வெற்றிகண்டோம். இப்பொழுது தமிழரசுக் கட்சியின் வரவேற்புக் கூட்டம் நடைபெறப் போகின்றது; ஊர்முழுவதும் திரளப்போகின்றது; எங்கள் சாயம் வெளுக்கப் போகின்றது; மற்ற இடங்களிலும் பொட்டுக்கேடு தெரியப் போகின்றது. எப்படியும் இந்த வரவேற்புக் கூட்டத்தை நடவாமற் செய்ய வேண்டும்' என்று பலவாறு கலகக் கும்பல் சிந்தித்தது.

தீர்க்கசிந்தனையின் பின் ஒரு ''ஐடியா'' களிமண்மூளையில் தோன்றியது. நாமும் அந்த நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒரு கூட்டமும் ஊர்வலமும் நடத்துவதாகச் சொல்லுவோம்; பொலிசாரிடம் ஒலி பெருக்கி அனுமதிச் சீட்டை முதலில் எடுப்போம்; ஒரு சிறு கைத்துண்டும் அச்சிட்டுப் பரப்புவோம். 25 பிரதிகள் போதும் என்று ''பிளான்'' போடப்பட்டது.

போட்ட பிளானின்படி பொலிஸ்காரரிடம் ஒலிபெருக்கி அனுமதிச் சீட்டும் பெறப்பட்டது. தமிழரசுக் கட்சிக் கிளையினர் அனுமதிச் சீட்டுக்குப் பொலிசாரிடம் சென்ற பொழுது இந்தச் செய்திகள் தெரியவந்தன.

''சூதாட்சிக்கலகம்'' வேணடுமென்றே இந்தச் சூழ்ச்சியைச் செய்தது ஐந்தாறு நாட்களுக்கு முன்னரே அக்''கலகம்'' பொதுக்கூட்டம் நடத்தியது. கூட்டம் நடத்தும் இடச் சொந்தக்காரர் எங்களுக்கே எழுத்தில் அனுமதி தந்துள்ளர்''. என்று தமிழரசுக் கட்சியினர். வாதிட்டனர். உண்மையை உணர்ந்த பொலிசார் தமிழரசுக் கட்சியினருக்கும் ஒலி பெருக்கி அனுமதி வழங்கினர்.

பின்னர் பொலிசார் ''சூதாட்சிக் கலகத்தின்'' ஒலி பெருக்கி விண்ணப்பத்தைப் பரிசிலனை செய்தனர். கூட்டம் நடத்தும் இடத்துச் சொந்தக்காரரின் கடிதம் பெறப்படவில்லை கிராமசேவகரின் சிபார்சு பெறப்படவில்லை எனவே பொலிசார் ''சூதாட்சிக் கலகத்தின்'' ஒலிபெருக்கி அனுமதியை ரத்துச்செய்தனர்.

திரு. இரத்தினத்தின் வரவேற்புக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சூதா[illegible] தைப்போல பத்துப்பங்குக்கும் அதிகமான ஆதரவாளர் சமூகமளித்தனர். பேச்சாளர்கள் நவரத்தினத்தையும் அவரின் அரசியற் குரு துரோக சிவத்தையும் சாடு சாடு என்று சாடினார்கள். கூட்டத்திலே கேள்விகள் கொடுத்த சூதாட்சிக் கழகத்து இளைஞர் சிலருக்கு நல்ல பதில் கொடுக்கப் பட்டது.

கூட்டத்துக்குவந்த மக்களின் தொகை; பேச்சாளர்களின் சாட்டை அடிகள்; கேள்விகளுக்குக் கொடுத்த பதில்கள் இவற்றைத் தாங்க முடியாதவர்கள் மீண்டும் மாபெரும் துரோகச் செயலில் இறங்கினர்.

கூட்டத்துக்குச் சென்று திரும்பியவர்களின் கார்களுக்குத் தெருவிலே ஆணிகள் வைக்கப்பட்டன. கூட்டம் நடந்த இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் மண்டைதீவு--யாழ்ப்பாணம் வீதியில் சோடாப் போத்தில் மூடிகளில் இறுக்கப்பட்ட ஆணிகள் வீதியின் குறுக்கே வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆணிகள் முதலில் வந்த இரண்டு சி. ஐ டி. பொலிசாரின் சைக்கிள்களைப் பதம் பார்த்தன. சைக்கிள், காற்றுப்போனதால் அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே நின்று பின்னா வந்த கார் ஒன்றின் வெளிச்சத்தில் ஆணிகளைப் பொறுக்கினர். நாற்பதுக்கு மேற்பட்ட ஆணிகள்—புது ஆணிகள் பொறுக்கப்பட்டன. பொலிசார் தம் சைக்கிள்களுடன் அங்கு வந்த இரண்டு கார்களில் ஏறி வந்து யாழ்ப்பாணத்தை அடைந்தனர். ஒரு கார் திரு. மு. ஆலாலசுந்தரத்தினுடையது. மற்றயது திரு. கா. பொ. இரத்தினத்தினுடையது. இந்த ஆணிகள் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

•

சுயாட்சிக் கழகமா? சூதாட்சிக் கலகமா? இப்போது சொல்லுங்கள்!

## தமிழினமே பொன்னரை மன்னித்துவிடு!

''தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்று பெருமையுடன் பாடினார் நாமக்கல் கவிஞர்.

ஆனால் தமிழனிடம் உள்ள அந்தக் குணம் என்னவென்பதை அணு அணுவாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார் தமிழ் காங்கிரசின் ஆயுட்காலத் தலைவர்.

''தவறு செய்துவிட்டு அதுபற்றிப் பின்னர் வருந்துவதுதான் தமிழர்களின் குணம்'! இப்படிக் கூறியிருக்கிறார் திரு. பொன்னம்பலம்.

தன்மானத் தமிழினமே! ஆனைப்பந்திக் காங்கிரசின் ஆயுட்காலத் தலைவர் இப்படிக் கூறிவிட்டாரேயென்று ஆத்திரப்படாதே!

உள்ளதைத்தானே அவர் கூறியிருக்கிறார்!

குலத்தை அழிக்கவந்த கோடரிக்காம்பு போல நம் இனத்தை அழிக்க வந்த கொள்கையற்ற தமிழ் காங்கிரசை தமிழ் நாட்டு அரசியலில் இன்னும் விட்டுவைத்திருப்பதற்காக தமிழினம் இன்று வருந்துவது உண்மையல்லவா? ஒற்றையாட்சி முறைக்கு வக்காலத்துவாங்கும் உலுத்தர்களை அரசியலில் இன்னும் பவனிவர அனுமதித்திருப்பதற்காக தமிழினம் இன்றுவருந்துவது உண்மை அல்லவா?

அரசியலில் தியாகம், ஒழுக்கம், நேர்மை நிதானமான போக்கு அந்தரங்கசுத்தி எதுவுமற்ற தமிழ்காங்கிரசை துரத்தியடிக்காமல் விட்டோமே கடந்த தேர்தலில்— என்று தமிழினம் இன்று வருந்துவது உண்மையல்லவா?

14 பேரைத் தமிழரசுக்கட்சியில் ஒரே அணியாக தமிழுரிமைக்கு போராட அனுப்பிவிட்டு-தமிழரசுக்கட்சியின் முயற்சிகளுக்கு எல்லாம் தடைக்கல்லாக இருப்பதற்கு மூன்று மூளையற்றதுகளையும் சென்ற தேர்தலில் அனுப்பி விட்டோமே எனத் தமிழினம் இன்று வருந்துவது உண்மையல்லவா?

தமிழ் காங்கிரசை இன்னும் அரசியலில் விட்டுவைத்திருக்கும் தவறுக்காக அவர்களில் மூன்று பேரைப் பாராளுமன்றம் அனுப்பிய தவறுக்காக தமிழினம் இன்று கண்ணீர் விடுகிறது. இந்தத் தவறினை மீண்டும் விட வேண்டாம் என்றே மறைமுகமாக எச்சரித்திருக்கிறார்—ஞாபகப் படுத்தியிருக்கிறார் தனிப்பெருந் தலைவர்.

எனவே தமிழினமே! உன் குணத்தை அவதூறுபடுத்தி விட்டாரென்று ஆத்திரப்படாமல் மன்னித்து விடு!

—கோவை—

## பிரளயம்

### இலக்கிய உலகு

"வேதாளம்"

அஹோ! வாரும் பிள்ளாய் வாசகனே!

என்ன கனகாலமாகக் காணவில்லையே? என்கிறாயா? நான் முருங்கையை விட்டு இறங்காதிருந்த இத்தனை காலமாக என்னென்ன வெல்லாம் நடந்திருக்கிறதென்கிறாய்?

என்னால் சகிக்க முடியவில்லை. இனி அகப்படுபவர்களைப் பிடித்து விடுகதை போடத்தான் போகிறேன்.

சரியா?

பிள்ளாய்! நீ நாக்கன் என் பானைப் பார்த்தாயோ? - கானமயிலாடக்கண்டு இந்த யாழ்ப்பாடியின் நகரிலும் 'தன் நாமப்' பத்திரிகையொன்று 'நாக்குவளைக்க' அவதாரஞ் செய்திருக்கின்றதே; அதைத்தான் கேட்கின்றேன். இனி மாரிகாலமல்லவா? - அந்த ஆசிரியப்பிரகிருதி சில பொன்மொழிகளை 'நவில்கிறது. சொந்தமாக வா என்கிறாயா? மூச்! அண்ணை போன்றோரிடமிருந்து செய்யும் 'ஜெப்படி' தான். அது' காசு கொடுத்து விஷயம் வாங்கக் கூட அல்லாடுகிறதாம். பாவம்.

சமீபத்தில் கொழும்பில் நடந்த ஒரு விழாவில் பேசிய ஈழத்து முன்னணி எழுத்தாளரொருவர் சிறுகதையைப் பொறுத்தமட்டில் நம் எழுத்தாளர்கள் எழுதிப் பழகுகிறார்கள் என்றார். இது 'குதிரைச்சக்தி'யில் முன்னேறிவரும் 3-4 இளம் எழுத்தாளர்களைத் தவிர ஏனைய அனைவர்க்குமே மிகவும் பொருத்தம்தான்.

நாடகம்? -

யாழ்நகரில் கடந்த 17ம் 24ம் (புரட்டாதி) திகதிகளில் இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டிருக்கின்றன.

**17 - 'பிரளயம்'**

முன்னேறத் 'துருதுரு'க்கும் எழுத்தாளரொருவரின் கதை, வசனத்திலுருவான ஓரங்க நாடகம். அதை நெறிப்படுத்தியவரும் அருமை'யானதொரு இளம் டைரக்டர். இளைய ஈழத்தினரின் கதைகளைப் பிரதிபலித்தார்கள்.

பிரளயம்!

ஆம்! புதியவர்கள் நிச்சயம் செய்வார்கள்.

**24 - 'வாக்குறுதி'**

யாழ். நகரமண்டபத்தில் எல்லா எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஒருசேரக் காணக் கூடியதாகவிருந்தது ஏனென்றால் நடித்தவர்கள் 'பிரபல' 'ஜாம்பவான்கள்' நால்வர். அதோடு வில்லுப் பாட்டுகள்' வேறு. கதா நாயகியோ பரதம் பயில்பவர். (இதில் மூவர் சினிமா நட்சத்திரங்கள்.) ஆனால்? - நல்ல காலம் கலைஞர் வேர்ணன் அபேசேகரா இல்லாமற் போனது.

நிறையச் செலவுசெய்தும் இப்படிப் 'பண்ணியது' அநியாயம்.

கச்சேரியில் தொடங்கி 'வாக்கு' ஒரு மாதிரி இழுத்துப் பறித்து' உறுதி செய்யப்பட்ட பின் சில எழுத்தாளர்கள் 'பேசிக்' கொண்டார்கள். அதிலிருந்து 'சிறுகதையிலென்ன, நாடகத்திலும் 'நகர' மாட்டோம் - என்பதே புரிந்தது.

ஒரு 'மாமூல்'.

கதை: எங்கோ இந்தியாவிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாம்.

வசனம்: பிரபல கவிஞருடையது.

பாடல்: பிரபல ஓவியருடையது.

எப்படி?

கதா நாயகியை எடுத்துவிட்டால் காற்றில் பறக்கிறது. -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி ஜெயந்தி சிறப்பிதழ்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுத
காந்தியாரின் நூற்றாண்டு விழாக் (

# ஜாதிகள் ஒழியவேண்டும் தீண்டாமை தொலையவேண்டு(ம்)

## காந்திஜிக்கு செய்யக்கூடிய கைம்மாறு இதுதான்!

ஒரு சாதுவாக—சன்னியாசியாக-துறவியாக ஏதோ தத்துவங்களைப் போதிக்கின்ற ஒரு தத்துவவாதியாக தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை காந்தியார்.

தாம்பெற்ற தத்துவங்களை எப்படி அரசியலிலே கலப்பது, தான் கற்ற நன்முறைகளை—தான் போற்றிப் பாதுகாக்கின்ற அறநெறிகளை—அன்பு முறைகளை எப்படி சமுதாயத்திற்குத் தருவது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

உலகத்தில் ஏராளமான துறவிகள் தோன்றியிருக்கின்றார்கள். ஒரு முறையல்ல; இருமுறை வாழ்க்கையிலே துறவு கொண்டவர்களுமுண்டு. முதலிலே இல்லறத்தைத் துறந்து துறவிகளாக ஆவார்கள்: பிறகு துறவறத்தைத் துறந்து இல்லறவாதிகளாக ஆவார்கள். இப்படி இரண்டுமுறை துறவு பூண்டவர்களும் உலகத்திலே உண்டு.

உத்தமர் காந்தியார் இல்லறத்திலிருந்தவாறே துறவிகள் அனுஷ்டிக்கவேண்டிய—அனுஷ்டிக்கத்தக்க—அத்தகைய நற்காரியங்களையெல்லாம் தன்னுடைய வாழ்க்கையின் வாயிலாகச்செய்து காட்டினார்.

சொல்வது சுலபம், செய்வது கடினம். ஆனால், அவர் சொன்னதைச் செய்தார்; செய்வதைச் சொன்னார்.

அதனால்தான் காந்தியடிகளுடைய திருப்பெயர் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்ற பெருநிலையைப் பெற்றிருக்கிறது.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டுக்கிடந்த—தாழ்த்தப்பட்டுக்கிடந்த— தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டுக்கிடந்த-கோடானுகோடி தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட்ட பெருமை உத்தமர் காந்தியாருக்கு உண்டு. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் புது வாழ்வு அளிக்கவேண்டும் என்ற பெருமை உத்தமர் காந்தியாருக்கு உண்டு.

நூற்றாண்டுக்காலமாக அடிமைப்பட்டு கிடந்த இந்த



இந்தியத் திருநாட்டினுடைய—கைவிலங்கு, கால்விலங்கு அறுபட வேண்டுமென்பதற்காக அன்பு வழியிலே போராடிய பெருமை காந்தியடிகளுக்கு உண்டு.

ஆகவே அரசியலில், பொருளாதாரத்துறையில், சமுதாயத்துறையில் தன்னுடைய வாழ்க்கையை இணைத்துக்கொண்டு. தன்னுடைய காரியங்கள் அனைத்தும் அறவழியிலே நடைபெற வேண்டும் என்பதற்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட பெரும் மகான், மகாத்மா என்றெல்லாம் அழைக்கப்படுகிற காந்தியடிகளுடைய திருப்பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கிறது.

அந்த அளவுக்கு இந்திய நாட்டுக்கு மாத்திரமல்லாமல் அகில உலகத்திலுமிருக்

**மு. கருணாநிதி**

கிற அரசியல் மேதைகள் மெச்சததக்க அளவுக்கு தத்துவ ஞானிகள் போற்றத்தக்க அளவு ஒரு கொள்கையை உருவாக்கி—அந்தக் கொள்கையை வாழ்க்கையிலேயே கடைப்பிடித்து—தீயின் நடுவே—சுழலும்புயற்காற்றின் நடுவே போராடி தன்னைப்பற்றி - தன்உயிரைப் பற்றிக் கவலைப்படாமல்—எவ்வளவுதான் சாதுவாக இருந்தாலும் பெரும் பெரும் அமளிகள் நடைபெறுகிற இடங்களிலெல்லாம் புத்தர் போன்ற உருவம் படைத்த உத்தமர் காந்தியார் புலி போல துணிந்து சென்றார் என்றால், அந்த மனத் துணிவுக்குப் பெயர்தான் மாகாத்மா.

முன்பெல்லாம்கூட மகாத்மாக்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் ஆத்மாக்களுக்கு மாத்திரமே பாடுபட்டவர்கள்.

எந்தனையோ முனிவர்கள் காடுகளில் இருந்து கந்த மூலாதிகளை உண்டு இரண்டு மூன்று சீடர்களை வைத்துக் கொண்டு தவங்கள் இயற்றியது உண்டு. அந்தத் தவமுனிவர்களை நாடி சிவனோ விஷ்ணுவோ, பிரம்மாவோ எதிரே வந்து 12 ஆண்டு காலம் தவம் இயற்றினாயே

என்ன வேண்(டும்)
என்று கேட்(டால்)
இருநூறு ஆ(ண்டு)
வாழ வேண்(டும்)
அழிப்பதற்கு
யாருமே இரு(க்க)
எனக்கு வஜ்ரா(யுத)
டும்—பாசுபதா(ஸ்திர)
டும் என்று இ(வ்வாறு)
அவர்களெல்லா(ம்)
கேட்டார்கள்.

உத்தமர் கா(ந்தியார்)
தக் கடவுளிடத்(தில்)
வரங்கேட்டார்(?)
மகேசன் என்(று)
கடவுள் என்று (...)

அந்தக் கட(வுள்)
அவர் கேட்ட(...)
வரும் ஒற்றுமை (...)

---

# மகாத்மா காந்தியின் குருவும் - வாரிசும்

மகாத்மா காந்தி ஓர் அதிசய புருஷர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை கடுமையாக எதிர்த்த அவர், பிரிட்டிஷ் மக்களை மனப்பூர்வமாக நேசித்தார். முதலாளித்துவ முறைகளை வெறுக்கவில்லை. அமைதியை விரும்பிய அவர், அநீதியை எதிர்த்து அறப்போர் புரிய அவர் தயங்கவில்லை. சனாதனதர்மத்தை பின்பற்றுவதாக பகன்ற அவர், ஜாதி வித்தியாசங்களையும், தீண்டாமையையும் அடியோடு அகற்ற அரும்பாடுபட்டார். பாமரர்களையும் ஏழைகளையும் கவர்ச்சித்த அவர், படித்தவர்களையும் பணக்காரர்களையும் கூட ஆகர்ஷித்தார்.

இந்திய அரசியல் அரங்கில் அவர் பிரவேசித்த சமயம் அவரைவிட பல பெரும் தலைகர்கள் இருந்தனர். பாலகங்காதர திலகர், லாலாலஜபதிராய், அன்னிபெஸண்ட், மாளவியா, போன்றோர் இந்திய அரசியலில் மாபெரும் தலைவர்களாக விளங்கினர். மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்ற பிரசித்தி பெற்ற பெரும் வழக்கு அறிஞர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அறிவும் ஆற்றலும் திறமையும் மிக்கவர்கள். ஆனால் அவர்கள் எல்லோருமே காந்திஜியை மகாத்மா என்று ஏற்று அவர் தலைமையில் பணிபுரிய தயாராகி விட்டனர். அன்றைய அரசியலிலே மிக மிதவாதியாக இருந்தவர் கோபாலகிருஷ்ண கோகலே. அவரே தனது அரசியல் குரு, வழிகாட்டி என்று எவ்வித தயக்கமுமின்றி தெளிவாகக் கூறினார் காந்திஜி. அதேபோல தனது கருத்துக்களில் பலவற்றை ஏற்க மறுத்த தீவிரவாதிகளாகத் திகழ்ந்த ஜவாஹர்லால் நேருவை எனது வாரிசு என்று ஐயத்திற்கு இடமின்றி பிரகடனப்படுத்தினர் காந்திஜி. பழுத்த மிதவாதி அவரது குரு; மிகத் தீவிரவாதி நேருஜி அவரின் வாரிசு. இதுவே அவர் ஒரு அதிசய புருஷர் என்பதற்கு சான்று அன்றோ.

**வி. ஆர். ராதாகிருஷ்ணன்**

தென்னாபிரிக்காவிலிருந்து காந்திஜி பாரதத்திற்குதிரும்பியபோது இந்நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கியவர் திலகராவார். ஆறு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்ட அவர் மாந்தலே சிறையிலிருந்து விடுதலையாகி அப்பொழுதுதான் நாட்டிற்குத் திரும்பி வந்தார். "சுயராஜ்யம் நமது பிறப்புரிமை" என்று அவர் அளித்த தாரக மந்திரம் நாடெங்கும் பரவி மக்கள் முழக்கமிட்டிருந்த காலம் இது. மிதவாதிகளைக் கண்டு இளைஞர்கள் எள்ளி நகையாடிய நேரமிது. அப்பொழுதுதான் தயக்கமின்றி தைரியமாக கூறினர். காந்தி, "கோகலே எனது குரு. வழிகாட்டி" என்று

தீவிரவாதி திலகரை அரசியல் குரு என்று கூறாமல் பழுத்த மிதவாதி கோகலேயை குரு என்று கூறியதைக் கண்டித்து காந்திஜிக்கு ஒருவர் மொட்டைக்கடிதம் எழுதினர். அக்கடிதத்திற்கு பதில் அளிக்கும் வகையில யங் இந்தியா இதழில் "கோகலே எனது ஆர அரசியல் குரு" என்பதற்கான காரணங்களை விளக்கி கட்டுரை ஒன்று எழுதினர். அதில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஒருவருக்குச் சீடராக [illegible] இந்தியத் தலைவர்கள் பலரைச் சந்தித்தேன். தாதாபாய் அவர்களைக் கண்டு அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன். அவரது மகனாக இருக்கத் தகுதி என்பதை உணர்ந்தேன். ஆனால் அவரது சீடராக இருக்கத் தகுதி இல்லை என்பதை உணர்ந்தேன். பிரோஷா மேதா இமயம் போல் காட்சியளித்தார். திலகர் சமுத்திரம்போல் தோன்றினார். கோகலே கங்கைபோல் விளங்கினர். இமயத்தில் ஏறுவது எளிதல்ல. கடலைக் கடக்கக் கப்பல் வேண்டும். ஆனால் கங்கையிலே இறங்கிக் குளித்து மகிழலாம். கோகலேயைப் பார்த்ததுடன் அவரிடம் என்னையறியாமலேயே பாசம் ஏற்பட்டது. பல ஆண்டுகள் பிரிந்திருந்த ஒரு பழைய நண்பனை இல்லை, தாயைக் காண்பது போல் உணர்ச்சி ஏற்பட்டது. பளிங்கு போன்ற புனிதத் தன்மையும் ஆட்டுக்குட்டியைப் போன்ற மென்மையும் அரிமாபோன்ற வீரமும் அவரிடத்தில் கண்டேன். ஒரு அரசியல் ஊழியருக்கு வேண்டிய எல்லா உரிய அம்சங்களையும் அவரிடத்தில் கண்டேன். அரசியல் உலகில் நான் கண்ட பரிசுத்தமான மனிதர் அவர்... அரசி[illegible] ஆன்மீகமாக்க அவர் முயன்றார். அவருக்கும் எனக்

(9ம் பக்கம் பார்க்க)

---

# 52 பவுண் த(...)

தென் ஆப்பிரிக்காவில் இருந்து நான் 1899-ல் இந்தியாவுக்கு புறப்பட்டபோது, ஒவ்வொரர் இடத்திலும் பிரிவு உபசாரக் கூட்டம் நடத்தினார்கள். விலையுயர்ந்த வெகுமதிகளையும் எனக்கு அளித்தார்கள். வெள்ளி, தங்கச் சாமான்களும் அன்பளிப்பில் அடங்கியிருந்ததோடு, விலையுயர்ந்த வைரச்சாமான்களும் இருந்தன.

இந்த வெகுமதிகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள எனக்கு என்ன உரிமை இருக்கிறது? இவைகளையெல்லாம் வாங்கிக்கொண்ட பிறகு, ஊதியும் பெறுமல் சமூகத்திற்கு சேவை செய்து வந்திருப்பதாக நான் எண்ணிக்கொள்ளுவது எப்படி? என் கட்சிக்காரர்கள் கொடுத்(த) சில வெகுமதிகளைத் தவி(ர) மற்றவை யாவும், சமூகத்திற்கு நான் செய்த சே(வை)க்கு என்றே முற்றும் எனக்கு அளிக்கப்பட்டவைகள் ஆகும். என் கட்சிக்காரர்களும் பொது வேலையில் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, பொது ஊழியர்கள் வேறு என்று பாகுபாடு செய்து கொள்ளுவதற்கும் இல்லை.

### மனைவிக்கு

கிடைத்த வெகுமதிகளில் நன்று தங்கச் சங்கிலி. அது 52 பவுண் பெறுமானம் உள்ளது. என் மனைவிக்கு என்று அதை அளித்தார்கள். ஆனால், அதுவுங் கூட என்னுடைய பொது சேவைக்கு அளிக்கப்பட்ட வெகுமதியே. ஆகையால் மற்றவைக(ளில்) இருந்து அதை நான் தனியாகப் பிரித்துவிட முடியாது.

ஒரு நாள் மாலை, இ(ந்த) வெகுமதிகளில் பெரும்பகுதியை எனக்கு அளித்தார்கள். அன்று இரவெல்லாம் என்னால் தூங்கவே முடியவில்லை. என் அறையில் அங்கும் இங்கும் இரவெல்லாம் உலாவினேன்; தீவிரமாக சிந்தித்தேன். ஆனால், ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

ஆயிரக்கண(க்கான)
புள்ள இந்த (...)
வேண்டாம் (...)
விடுவது எனக்(கு)
இருந்தது. அ(...)
துக்கொள்வதே
அதிக கஷ்டமா(க)
அவைகளை நா(ன்)
கொள்ளுகிறே(ன்)
என் குழந்தைக(ள்)
என்ன? என் ம(னை)
யம் என்ன? சே(...)
டிய வாழ்க்கை
கள் பயிற்சி (...)
கள்; சேவை (...)
குரிய சன்மா(...)

பொதுமக்
கப்போவது
யிருக்கிறா(ர்)
(...) அவ(...)
(...)ந்து இ(...)
கப்பட்டன
(...)கொள்
த(...)து சுய(...)

அவர்களுக்குச்
திருக்கிறேன்.

### நகை

வீட்டில் என்
உயர்ந்த ந(...)
இல்லை. எங்(...)
யையே விரை(...)
ஆக்கிக்கொண்(...)
கிறோம். அப்ப(...)
தங்கக் கடிகா(...)
கள் எவ்வா(...)
கொள்ளமுடிய(...)
லிகளையும் (...)
களையும் நான்(...)
அணி(...)கொ(...)

நகைகளின் (...)
ஆசையை மக்(...)
வேண்(...) (...)
லை நான் மக்(...)
சம் செய்தும் (...)
அப்படி இரு(...)
வந்திருக்கும் ந(...)
என்ன செய்வ(...)

இந்த வெ(...)
லாம் நான் (...)
வக்கூடாது எ(...)
வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை தவறிக்கெட்டு நின்ற ஆசிய மக்களை வாழ்விக்க வந்த அண்ணல்
# ழாக் கொண்டாட்டங்கள் நாடு முழுவதும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

## டும்

ன்'ன வேண்டும் கேள் என்று கேட்டால்—நான் இருநூறு ஆண்டு காலம் வாழ வேண்டும்—என்னை அழிப்பதற்கு உலகத்தில் யாருமே இருக்கக்கூடாது—எனக்கு வஜ்ராயுதம் வேண்டும்—பாசுபதாஸ்திரம்வேண்டும் என்று இப்படித்தான் அவர்களெல்லாம் வரங் கேட்டார்கள்.

உத்தமர் காந்தியார் எந்தக் கடவுளிடத்தில் சென்று வரங்கேட்டார்? மக்களை மகேசன் என்று கருதினார். கடவுள் என்று கருதினார்.

அந்தக் கடவுளிடத்தில் அவர் கேட்டவரம் அனைவரும் ஒற்றுமையாக இருங்கள் — உங்களில் ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளாதீர்கள்—அன்பு வழியில் நடவுங்கள்— என்பதுதான்.


மனித சமுதாயத்தைப் பார்த்து—மக்கள் பெருங் கடலைப்பார்த்து — மக்கள் தெய்வங்களைப் பார்த்து— நடமாடும் கோவில்களைப் பார்த்து காந்தியார் கேட்ட வரம் நீங்கள் ஒற்றுமையாக இருங்கள் — ஒழுக்கத்தோடு இருங்கள் — செம்மையாக வாழ்ந்திடுங்கள் — மற்றவரைச் சுரண்டிப் பிழைக்காதீர்கள் என்ற இந்த வரத்தைத்தான் மக்களைப பார்த்து அவர் கேட்டார்.

அவருடைய பொன்மொழிகளிலே ஒன்றைப் பார்த்தேன். 'மதம் மக்களை ஒன்று படுத்தத்தானே தவிர மக்களைப் பிரிப்பதற்காக அல்ல!' என்று அதிலே எழுதப்பட்டிருக்கிறது.

ஒன்றுபடுத்தத்தான்மதம். பல வண்டிகள் இணைக்கப் பட்டிருப்பதற்குப் பெயர் ரயில். அதைப் போல்தான்' பலரை ஒன்றுபடுத்தும் தொடர்தான் மதமாக இருக்கவேண்டும்.

ஆனல் உலகத்திலே மதம் எப்படியிருக்கிறது? ஒன்றையொன்று அழிக்க—ஒன்றை

(9ம் பக்கம பார்க்க)



# அ தங்க மாலையை காந்திஜி என்ன செய்தார்?

பொதுமக்கள் அன்பளிப்பாக கொடுத்த தங்கப் பவுண் மாலையை பெற்றுக்கொண்டு தொழிற்சாலை அமைக்கப்போவதாக ''பெரிதாக'' புழுகிவிட்டு பின்னர் 'கப் சிப்' என்று இருக்கும் அரசியல்வாதிகள் இந்நாட்டிலேயிருக்கிருர்கள். ஆனல் அண்ணல் காந்திஜி பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கு அளிக்கப்படும் வெகுமதிகளைக் கூட அவர்கள் தமது சொந்தமாக்கிக் கொள்ளக்கூடாதென்ற கொள்கை படைத்தவர். தென்னபிரிக்காவிலிருந்து இந்தியா புறப்பட்டபோது காந்திஜிக்கும் கஸ்தூரிபாய்க்கும் விலையுயர்ந்த பல வெகுமதிகள் அளிக்கப்பட்டன. அன்னை கஸ்தூரிபாய்க்கு 52 பவுண் தங்கச் சங்கிலியொன்று அளிக்கப்பட்டது. அதை வைத்துக்கொள்ள அன்னை ஆசைப்பட்டார். அதற்கும் காந்திஜி அனுமதிக்க மறுத்துவிட்டார். இதுபற்றி அவரே தமது சுயசரிதையில் கூறியிருப்பதை இங்கு படியுங்கள்!

ஆயிரக்கணக்கில் மதிப்புள்ள இந்த வெகுமதிகளை வேண்டாம் என்று துறந்துவிடுவது எனக்குக்கஷ்டமாக இருந்தது. அவைகளை வைத்துக்கொள்வதோ இன்னும் அதிக கஷ்டமாக இருந்தது. அவைகளை நான் வைத்துக் கொள்ளுகிறேன் என்ருலும், என் குழந்தைகளின் சங்கதி என்ன? என் மனைவியின் விஷயம் என்ன? சேவைக்கு வேண்டிய வாழ்க்கை நடத்த அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிருர்கள்; சேவை ஒன்றே அதற்குரிய சன்மானம் என்றும்

அவர்களுக்குச் சொல்லி வந்திருக்கிறேன்.

### நகை ஆசை

வீட்டில் என்னிடம் விலையுயர்ந்த நகை எதுவும் இல்லை. எங்கள் வாழ்க்கையையே விரைவாக எளிமை ஆக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படியிருக்கத் தங்கக் கடிகாரங்களை நாங்கள் எவ்வாறு வைத்துக் கொள்ளமுடியும்? தங்கச் சங்கிலிகளையும் வைர மோதிரங்களையும் நாங்கள் எவ்வாறு அணிந்துகொள்ளமுடியும்!

நகைகளின் மீது இருக்கும் ஆசையை மக்கள் விட்டுவிட வேண்டும் என்று பல தடவை நான் மக்களுக்கு உபதேசம் செய்தும் இருக்கிறேன். அப்படி இருக்க என்னிடம் வந்திருக்கும் நகைகளை நான் என்ன செய்வது?

இந்த வெகுமதிகளையெல்லாம் நான் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். இவற்றையெல்லாம் சமூகத்திற்கே சொந்தமானதாக்கி, இதற்குச் சில தருமகர்த்தாக்களை நியமித்து' ஒரு கடிதம் எழுதினேன். காலையில் என் மனைவியுடனும், குழந்தைகளோடும் ஆலோசனை நடத்தி இப்பெரும் பாரத்தை நிவர்த்தி செய்துகொண்டேன்.

### குழந்தை வக்கீல்!

இதற்கு என் மனைவியை சம்மதிக்கச் செய்வதில் கொஞ்சம் சிரமம் இருக்கும் என்பதை அறிவேன். குழந்தைகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான கஷ்டமும் இராது என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே, அவர்களையே என் வக்கீல்கள் ஆக்கிக்கொண்டுவிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

என் யோசனையை குழந்தைகள் உடனே ஏற்றுக்கொண்டு விட்டனர்; ''இந்த விலையுயர்ந்த வெகுமதிகள் நமக்கு தேவையில்லை. ஆகையால், அவற்றைச் சமூகத்திற்குத் திருப்பி கொடுத்துவிடவேண்டியதே. அவை நமக்கு எப்பொழுதாவது தேவைப்பட்டால், நாம் அவற்றை எளிதில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்'' என்று குழந்தைகள் கூறினர்.

நான் ஆனந்தம் அடைந்தேன்; ''அப்படியானல், உங்கள் தாயாரிடம் இதைக் குறித்து எடுத்துக்கூறி, அவளும் இதற்கு சம்மதிக்கச் செய்வீர்கள் அல்லவா?'' என்று கேட்டேன்.

''நிச்சயமாகச் செய்வோம். அது எங்கள் வேலை. அம்மாவுக்கு நகைகள் வேண்டியதில்லை. அவைகளை எங்களுக்காக வைத்திருக்கவேண்டும் என்றே அவர் விரும்புவார். 'எங்களுக்கு அவை தேவையில்லை' என்று நாங்கள் கூறும்போது, அவைகளைக் கொடுத்துவிட அம்மா ஏன் 'சம்மதிக்கமாட்டார்?'' என்றும் கூறினர்கள்.

### கண்ணீர் வடித்தார்!

பேச்சளவில் இது எளிதாகத்தான் இருந்தது. ஆனல், காரியத்திலோ அது அதிகக் கஷ்டமாக இருந்தது.

என் மனைவி கூறியதாவது: ''இவையெல்லாம் உங்களுக்கு தேவைப்படாமல் இருக்கலாம். உங்கள் குழந்தைகளுக்கும் அவை வேண்டாம் என்று இருக்கலாம். அவர்களை நீங்கள் தட்டிக் கொடுத்தால், உங்கள் விருப்பப்படியெல்லாம் அவர்கள் கூத்தாடுவார்கள். நகைகளை நான் போட்டுக் கொள்ள நீங்கள் அனுமதிக்காமல் இருப்பதை நான் புரிந்துகொள்ளுகிறேன். ஆனல், என் மருமகப் பெண்கள் வரும் போது அவர்கள் விஷயம் என்ன? நிச்சயம் அவர்களுக்கு நகைகள் வேண்டியிருக்கும். நாளைக்கு நம் நிலை எப்படி இருக்கும் என்பது யாருக்குத் தெரியும்? அதிக அன்போடு அளிக்கப்பட்ட இந்த வெகுமதிகளைத் திருப்பிக் கொடுத்து விட நான் ஒரு போதும் சம்மதிக்கவே மாட்டேன்.''

இவ்வாறு அவள் வாதங்களைச் சண்டமாருதமாகப் பொழிந்தாள். முடிவில் கண்ணீர் வடித்தும் அவற்றைப் பலப் படுத்தினுள்.

ஆனல், குழந்தைகளோ உறுதியுடன் இருந்தார்கள். நானும் அசையவில்லை.

நான் சாந்தமாக பின்வருமாறு கூறினேன். 'குழந்தைகளுக்கு இனிமேல்தான் திருமணம் நடக்க வேண்டும். அவர்கள் குழந்தைகளாக இருக்கும் போது திருமணம் செய்து வைத்து விட நாம் விரும்பவில்லை, அவர்கள் வளர்ந்ததும், அவர்கள் காரியங்களை அவர்களே கவனித்துக் கொள்ளுவார்கள். மேலும் நகைப் பித்துப் பிடித்த பெண்களை நம் மகன்களுக்கு நாம் மணம் செய்து வைக்கப் போவதில்லை என்பதும் நிச்சயம். அவர்களுக்கு நகை போடவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும். அவற்றை வாங்கிக் கொடுக்க நான் இருக்கிறேன். அப்போது நீ என்னைக் கேள்.'

### என்ன உரிமை?

அதற்கு அவள், 'உங்களைக் கேட்பதா? இவ்வளவு நாள் பழகியும் உங்களை எனக்குத் தெரியாத? என் நகைகளைப் பிடுங்கிக் கொண்டீர்கள். அவற்றை நான் போட்டுக்கொண்டு நிம்மதியாக இருக்கவும் நீங்கள் என்னை விடவில்லை. இப்படிப்பட்ட நீங்கள் மருமக்கள்மார்களுக்கு நகை வேறு செய்து போட்டு விட போகிறீர்களாக்கும்! முடியாது. நகைகளை நான் திருப்பிக் கொடுக்கப் போவதில்லை. மேலும், என்னுடைய கழுத்துச் சரத்தைக் கேட்க, உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'

'ஆனல், அந்தக் கழுத்துச் சரத்தை, உனக்குக் கொடுத்தது என் சேவைக்காகவா, உன் சேவைக்காகவா?' என்று நான் கேட்டேன்.

'உங்கள் சேவைக்காகவே என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், நீங்கள் செய்த சேவை, நான் செய்த சேவை அல்லவா? உங்களுக்காக இரவு பகல் நான் பாடுபட்டு உழைத்திருக்கிறேன். அதெல்லாம் சேவையல்லவா? போகிறவர்கள் வருகிறவர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்து வந்து, அவர்களுக்கெல்லாம் உழைத்து, நான் கண்ணீர்வடிக்கச் செய்தீர்கள். அவர்களுக்கெல்லாம் அடிமையாகவே உழைத்தேனே!' என்ருள் என் மனைவி.

### வெகுமதி பெருதே!

இச் சொல் அம்புகள் என் உள்ளத்தில் தைத்தன. அவற்றுள் சில ஆழப் பதிந்தன. ஆனலும், நகைகளை திருப்பிக்கொடுத்து விடுவது என்று நான் உறுதிகொண்டு விட்டேன். இதற்கு அவளும் முடிவாகச் சம்மதித்து விடும்படி செய்வதில் எப்படியோ வெற்றி பெற்றேன்.

ஒரு தருமகர்த்தாப் பத்திரம் தயாரித்தேன். அந்த வெகுமதிகளையெல்லாம் ஒரு பாங்கியில் ஒப்படைத்தேன். என் விருப்பபபடியோ, தருமகர்த்தாக்களின் விருப்பப்படியோ, இந்நிதியைச் சமூகத்தின் சேவைக்குப் பயன்படுத்துவது என்று ஏற்பாடு செய்தேன்.

இவ்வாறு இந் நிதியை உண்டாக்கியதற்காக நான் என்றும் வருந்தியதே இல்லை. சில ஆண்டுகள் ஆனதும, அப்படிச் செய்தது தான் புத்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் கேள்விக்கணையிடையே சிக்கி

# பொன்னம்பலம் பட்டபாடு!

## திகைத்தார்— திணறினர் வெகுண்டார்—உறுமினர்!

### உங்கள் உபதேசம் தேவையில்லையென்ற ஜீ.ஜீ.க்கு வாலிபர்களின் சூடான பதில்!

**ஊர்காவற்றுறையில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒழுங்குசெய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்றுக்கு வந்திருந்த திரு. பொன்னம்பலம், இளைஞர்களின் கேள்விக்கணைகளுக்கு பதில் சொல்லமுடியாது திணறிப்போய் கேள்விகேட்ட இளைஞர்கள் மீது சீறிவிழுந்தார். அரசியல் தெளிவுகொண்ட அந்த இளைஞர்கள் மத்தியில் வசமாக மாட்டிக்கொண்ட தமிழ் காங்கிரஸ் தலைவர், ஆத்திரமடைந்த நிலையில் 'எனக்கு உங்கள் உபதேசம் தேவையில்லை' என்று கூற, இளைஞர்கள் 'நீதி மன்றத்தில் சாட்சிகளை மடக்குவது போலல்லவா எம்மை மடக்க நினைக்கிறீர்கள்' என்று பதிலடி கொடுக்க நான் அப்படித்தான் கேட்பேன்' என்று பொன்னம்பலம் சொல்ல அப்படியானல் நீர் ஊர்காவற்றுறைத் தொகுதியில் வெல்லப்போவதை நாங்களும் பார்த்துக்கொள்ளுகிறோம் என்று சவால் விட்டுக் கூறிவிட்டு வெளியேறினர். பொன்னம்பலம் முகத்தில் அசடு வழிந்தது.**

அண்மையில் ஊர்காவற்றுறைச் சனசமூக நிலையத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் அவர்களுடன் தொகுதி மக்கள் கலந்துரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறி ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தார், தானும் ஒரு எம். பி. ஆகிவிடலாமென்று பகற்கனவு கண்டுகொண்டிருக்கும் திரு. ரி. சிவஞானம். இவர் அடுத்த பொது தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக ஊர்காவற்றுறையில் போட்டியிடவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல்வரும் போதுதான் தமிழ்க் காங்கிரஸ்காரர்களுக்கு மக்களின் ஞாபகம் வருவது வழக்கமல்லவா?

கூட்டம் 6 மணிக்கு நடைபெறும் என்று துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்டமையினால் மக்கள் கூட்டம் பொன்னம்பலத்திடம் திட்டவட்டமாக சொல்லவேண்டியவற்றை சொல்லவந்தபோதிலும் ஆயுட்காலத் தலைவர் கிட்டத்தட்ட இரண்டரை மணித்தியாலங்கள் தாமதித்து வந்தமையினால் கூட்டத்தின் ஒரு பகுதியினர் இவரைத் திட்டிக்கொண்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இரவு 8. 30 மணியளவில் சீடன் சங்கரியுடன் (கிளிநொச்சி காங்கிரஸ் அபேட்சகர்) கையிலே பையுடன் வந்திறங்கினர் பொன்னர். தமிழ்க்காங்கிரஸ் மேல் உள்ள சந்தேகங்களையும் அதிருப்தியையும் தலைவர் அவர்களிடம் கேட்டுநீக்கிக்கொள்ளலாம் என்றும் இதற்கு முன் திரு. ஆனந்தசங்கரி பேசுவார்கள் என்றுசொல்லி உட்கார்ந்தார் சிவஞானம்.

வருகின்ற தேர்தலில் தன்னை, காங்கிரஸ் அபேட்சகராக தலைவர் நிறுத்துவாரோ அல்லது நீக்கிவிடுவாரோ என்றசந்தேகத்தில் பொன்னரைப் பற்றி புகழ்ந்து புளுகித் தள்ளி அவரிடம் தேவையான அளவு நற்பெயரை சம்பாதித்துக் கொண்டார் சங்கரி.

நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான் போல் லங்காசமசமாஜக்கட்சியிலிருந்து விலகி அண்மையில் பொன்னர் காலிலே சரணடைந்த சங்கரி பொன்னர் அன்று தொட்டு இன்றுவரை புரிந்த புலுடாக்களுக் கெல்லாம் நற்சான்று பகன்றமை எல்லோருக்கும் பெருவியப்பைப் கொடுத்ததாயினும் அவர் அப்படிப் பேசவேண்டியதன் அவசியத்தையும் மிக எளிதில் மக்கள் புரிந்து கொண்டார்கள். தமிழரசுக் கட்சியை தன்னால் இயன்வரை தாக்கிப்பேசிய இவர் கூடியிருந்தவர்களுக்கு போர் அடிப்பதை உணர்ந்தவர் போல் சிறிது நேரத்தில் அமர்ந்தார்.

இதன்பின் கேள்விகளையும் சந்தேகங்களையும் கேட்கலாம் என்று கூறவே அங்கு வந்திருந்த இளைஞன் பாலேந்திரன் சேவியர் அவரிடம் கீழே காணும் கேள்வியை முதலில் கேட்டான்.



ஜீ. ஜீ. யை தனது கேள்வியால் மடக்கிய இளைஞர்களில் ஒருவரான செல்வன் பாலேந்திரன் சேவியர் இவர்தான்.

இங்கு பேசிய திரு. ஆனந்தசங்கரி, தமிழரசுக் கட்சி புரிந்த துரோகங்களையும் தமது கட்சி புரிந்த நன்மைகளையும் தமக்குத் தெரிந்த வகையில் இங்கு கூறினர். இதிலிருந்து தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இரு அரசியற் கட்சிகளாக தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அரசியலில் இரு துருவங்கள்போல் விளங்குகின்றன என்பதையும் அவர் தெளிவாக்கியுளார். ஆகவே இப்படி தமிழரசுக் கட்சிக்கு நேர்மாறான கட்சியாக விளங்கும் நீங்கள் கேவலம் அவர்களுடன் சேர்ந்து ஒரு யாழ் மாநகர சபையை நடத்த முடியும் என்றால், ஏன் பாராளுமன்றத்திலும் நீங்கள் தமிழ் [illegible] சாருடன் ஒன்று சேர்ந்து தமிழ்மக்களாகிய எம்மை வழி நடத்த முடியாது?

இக்கேள்வியை அவ்விளைஞன மிகத்துடிப்புடனும் ஆவேசத்துடனும் கேட்கவே குழுமியிருந்த மக்கள் கைதட்டிக் கரகோஷம் செய்தனர். சிறிதும் இந்நிலையை எதிர்பாராத பொன்னர் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு 'அவர் கேட்ட துடிப்பிலே நீங்களும் கைதட்டி விட்டீர்கள். மேயா ஒரு பொதுவான மனிதன். நகரசபையில் தண்ணீர், மின்சார விநியோகம் பற்றித்தான் விவாதிக்கப்படுகின்றன. அதனாலதான் அவர்களுடனசேர்ந்தோம்' என்று பதிலை நீட்டி தட்டிக் கழித்தார். இவருடைய இப்புலுடாப் பதில் மக்களுக்கு திருப்தியளிக்கவில்லை.

இதன் பின் இன்னும் சிலர் இது சப்பந்தமாக கேள்விகள் சில கேட்கவே தான் அதற்கு முதற் கேள்வியின் போதே பதில் கொடுத்துவிட்டதாகக் கூறி அவர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கினர் பொன்னம்பலம்.

முதற் கேள்வியில் பொன்னரைப் பெருஞ் சங்கடத்துக்குள்ளாக்கிய அதே இளைஞன் இன்னுமொரு கேள்வியிருப்பதாகக் கூறவே, மற்றவர்கள். கேட்ட பின் நீர் கேட்கலாம் என்று பொன்னர் கூற நாங்கள் கேட்கவில்லை அவர் கேட்கட்டும் என்று கூட்டத்திலிருந்த மக்கள் கூறினர் வேறுவழியின்றி அவ்விளைஞனை கேட்க அனுமதித்தார் பொன்னர்.

'வருகின்ற பொதுத் தேர்தலில் உமது கட்சியை தமிழ்மக்களின் ஏக கட்சியாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்தும் பெறச் செய்யவும் ஒரே குரலாக பாராளுமன்றத்தில் எதிரொலிப்பதற்கு தனியொருகட்சியாக உமது கட்சியை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப தமிழ் மொழி பேசுகின்ற மக்களிடம் வாக்குகளைக் கோருகின்ற நீர்' மொழி அடிப்படையில்ஒருதமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதைஎதிர்த்துகுறிப்பிட்ட ஒரு மதத்திற்கு பல்கலைக் கழகம் கோருவதன்காரணம் என்ன? இது தான் இரண்டாவது கேள்வியாகும்.

இக்கேள்வியையும் குழுமியிருந்தமக்கள் கைதட்டிக் கரகோஷம் செய்து வரவேற்றனர். இதற்குப் பதிலளித்த [illegible] பல்கலைக் கழகம் தமிழ் மக்களுக்குத்தான் ஆனால் மெய் [illegible]

(9-ம் பக்கம் பார்க்க)

## நாடகத் திறனய்வு

24-9-69 மாலை 6 30க்கு வி. ஆர். கிருஷ்ணமூர்த்தியின் தொண்டால் வளரும் யாழ்ப்பாணம் கவின் கலை வளர்ச்சி மன்றத்தினரின் நாடகமாகிய வாக்குறுதி பார்க்க, யாழ்ப்பாணத்துக் கலைஞர்; மாநகர உறுப்பினர்கள்; சுவைஞர்கள் திரண்டனர். யாழ்ப்பாணமல்லவா பி. ப. 7 30க்கு ஒரு மணித்தியாலம் பிந்தி—நாடகம் ஆரம்பமாகியது.

'தேவன்-யாழ்ப்பாணம்' அவர்கள் வரவேற்புரையாக 'பழமையில் நவீனம், உத்தியில் நவீனம் கண்டு நாடகம் வளர்கின்றது. நவரசங்களையும், ஒரு சேர நாடகமாக்க வேண்டிய காலத்தில் குறுகிய நேரப்பரிசோதனை நாடகமா இவ் 'வாக்குறுதி' அமைகின்றது' எனக் கூற, திரு. க. கயிலைநாதன் ஜே.பி அவர்கள் தலைமையுரையை எழுதி வந்து ஒப்புவித்தார். நாடகத்திற்கு வசனமமைத்த கவிஞருக்கு தலைமையுரையும் எழுதிக் கொடுக்கும் பணியுமமைந்திருக்கலாம்.

நாடகம், கலை பற்றித் தெரிந்தவர் மட்டும்தான் தலைமை வகிக்கவேண்டுமென்பதென்ன தலைவிதியா? நாடகத்திற்குப் பண உதவி செய்யுங்கள் — தலைவராகித் துண்டெழுதிப்படிக்கலாம். ஆமாம்! இது யாழ்ப்பாண மரபுகள்—

'குப்பையிலே குண்டுமணியாக விருந்த குழந்தையை (இந்துமதியை) கலைஞன் வளர்த்தான்; கலையிலும் நடனக் கலாவல்லியாக்கினன். கலையில் நிறைவு கிடைத்தபின்பு — ஆண்டவன் முன்பு மட்டுமே நாட்டியம் நிகழவேண்டும் என வாக்குறுதியைக் குரு கேட்டார். சிஷ்யை ஒப்புக்கொண்டாள்.

தெய்வ சன்னிதானத்தில் ஆடும் கலையினை, மன்னன் கண்டான். தன் அவை மாபு தவறி அவளைச் சபையில் ஆட அழைத்தான். இந்துமதி தன் ஆசானின் வாக்குறுதியை எண்ணி மறுத்தாள்.

தனது குருவை சிறையாக்கப்படலாமெனவும், ஆடாது விட்டால் சிரச்சேதம் தண்டனையாகலாம் எனவும் கேட்ட அவள் சம்மதித்தாள்; சபையில் ஆடினள் ஆடிமுடிய தானுண்ட மருந்தால் மரணமானள்.'

இதுவே கதை. பரதக் கலையின் உயர்வை, மாசற்ற கலையைக் காட்ட எழுதிய டி. எஸ். கோதண்டராமனின் கதையை நிகழ்த்த வந்த இந்துமதி—கோகிலா ராஜரட்னம் — முறையாக பாதம் பயிலவில்லையே என்பதை ஒப்புக் கொள்வதுபோல ஆடினர்; அப்படி ஆடினர்.

பரதம் தெரிந்த ஒருவர் இப்பாத்திரத்தை ஏற்றிருப்பின் நாடகம், ஆரம்பமானதும் களைகட்டியிருக்கும் நிச்சயமாக—

முதல் காட்சியின் நீளம் அளவு சம்பவங்களமையவில்லை. திரும்பத்திரும்ப கலையுயர்வு கூறும் வசனங்களை 'கவிஞர். நாகராஜன் அமைத்து, கலையுயர்வு காட்ட முனைந்தமை தான் காரணமோ!

வசனம் எந்த விதப் புதுமையையும் தரவில்லை. குருவே, அரசே, ஆனல்...... ஆனல்...... எனப் பழைய பாணியில்......நாடக பாத்திரங்களே பழைமையானவர்கள்தானே வசனங்களேன் புதுமையாயமையவேண்டும்!

சிறுகருவைக் கதை செய்தார் கோதண்டராமன் கதையில் கருத்து இருந்த அளவினை வசனமாக்கும் பேனு செய்யத் தவறிவிட்டது—

கலைத்தலைவன் ஆக, இந்துமதியின் கலைத் தெய்வமாக வரும் வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பாத்திர பாவத்துடன் திகழ்ந்தார். திரும்பத் திரும்ப கூறிய கருத்தையே, கூற வேண்டிய வசனங்கள் அவரையும் சோபிக்கவிடாது தடுத்தன. ரி. எஸ். லோகநாதன் தோற்றத்தில் அரசன்; உறுமலில் அரசன். பேசத்தான் வசனமில்லையே! எஸ். ரி. அரசு தனது பாத்திரத்தை நிறைவு செய்கின்ருர்.

# வாக்குறுதி

எஸ். வடிவேலுவும், கே. கே. வியும் நன்ருகச் செய்தார்கள். நகைச் சுவைக்கு அவர்களில்லாது போனல் சபை எப்போது சிரிப்பது! கே. கே. வியின் அங்க அசைவு, தோற்றம் யாவும் மிகப் பொருத்தம். சால்வையை கமக்கட்டுள் வைக்கும் பழைமையையும் அருமையாகச் சாடினர் வடிவேலு—பரதக் கலையும் தெரிந்திருப்பின் கோகிலாராஜரட்னம் பாத்திரமாகியிருக்க முடியும்.

புது முயற்சி; ஆதரிக்க வேண்டிய முயற்சி; எங்கள் கலைஞர்கள் வளர இன்னும் இப்படியான பல நாடகங்கள் வரத்தான் வேண்டுமோ!

அனுமதிச் சீட்டின்றி கலைஞர்களை, பெரியவர்களையழைத்த துணிவு—கலை வளர நல்ல உள்ளங்கள் எமது நாட்டிலுண்டு என்பதையுணர வைத்தது—

அடுத்து மேடையேற்ற முன்பு, சபை உணர்ச்சியுடன் பார்க்க விரும்பினல், பல திருத்தங்கள் அவசியம். உண்மை கசப்பாயிருப்பினும்; உண்மை சாவதில்லை—

— அன்பு—


## விற்பனையாளர் தேவை

இணுவில் பகுதியில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு
சுதந்திரன்,
த. பெ. இ: 1183
கொழும்பு—12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப்பகுதி..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரையும் பிரிக்கவும், இந்துக்களையும் கத்தோலிக்கர்களையும் பிரிக்கவும் தமிழரசுக் கட்சியை விழுத்தித் தமிழ்க் காங்கிரசை எழுப்பவும் பல்கலைக்கழகப் பிரச்சினையை அரசாங்கம் வளர்த்துவருகின்றது.

திருவாளர்கள் சோ. செல்வச்சீராளன் சி. சண்முகநாதன் வ. சிவநாதன் சு. இரத்தினராசா, சந்திரசேகரம், க. தருமலிங்கம் முதலானோரும் பேசினர். பருத்தியடைப்புத் தமிழ் அரசுக் கட்சிக்கிளையின் அலுவலாளர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சி. வடிவேலு செயலாளர் தா. ஜெயராசா, துணைச் செயலாளர் மு. பாலேந்திரன் பொருளாளர் வ. சிவநாதன்.

வாலிப முன்னணியின் அலுவலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சி: சண்முகநாதன், காரியதரிசி: வே. தயாநாதன், பொருளாளர்: ப. குசலநாதன்.

## சந்திப்பு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக உங்களுடைய இரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எனது கச்சேரிகளுக்கு வந்து என்னை மகிழ்விக்கும் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சொல்ல விரும்புகிறேன். இது போலவே ஏனைய கலைஞர்களின் கச்சேரிகளுக்கும்சென்று அவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இரசிகர்களுடைய ஆதரவில்லா விட்டால் கலைஞர்கள் முன்னேற முடியாது. மேலும் ரசிகர்கள் ஒரு கச்சேரிக்கு வரும் போது தங்களுக்குத் தெரிந்த பலருக்கும் சொல்லிக் கூட்டி வர வேண்டும். என்றைக்கும் அவர்களது ஆதரவிற்கு என் நன்றி. வணக்கம்.

## 52 பவுண்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

திசாலித்தனமானது என்பதை என் மனைவியும் அறிந்து கொண்டாள். எத்தனையோ ஆசைகளில் இருந்து அது எங்களைப் பாதுகாத்தது.

பொது சேவையில் ஈடுபட்டு இருப்பவர்கள், விலையுயர்ந்தவெகுமதிகளை ஏற்றுக் கொள்ளவே கூடாது என்பது என்னுடைய திடமான கருத்து.

(தமிழ் நாடு காந்தி நினைவு நிதிக் குழுவினர் வெளியிட்ட 'மகாத்மா காந்தியின் சுயசரிதை' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)

## சைவத் தமிழர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆயுபோவன்' கூறி பௌத்த பிக்குகளையும் மற்வர்களையும் வரவேற்ற காட்சி தமிழினத்தின் தன் மானத்துக்கு சவால் விடுவதாக இருந்தது.

கல்வியமைச்சின் பூரண ஒத்துழைப்புடனும் ஆசியுடனும் சைவத் தமிழ் பிள்ளைகளை சிங்கள பௌத்தர்களாக்கும் திட்டத்தை அமுல் நடத்துவதில் பௌத்த காங்கிரஸ் பெரும் பணம் செலவழித்து வருகிறது.

## மகாத்மா காந்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சமூக சீர்திருத்த விஷயங்களிலும் மேற்கத்திய பண்பாட்டைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனாலும் அவரே எனது குரு என அழைக்கத் தோன்றுகிறது.

## இளைஞர்களின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ரையே தான் இந்துப்பல்கலைக்கழகம் என்று வைக்கும்படி கூறுவதாகவும் சேர், பொன்னம்பலம் இராமநாதன், ஆறுமுகநாவலார் ஆகியோர் விட்டுச் சென்ற செல்வத்தை இதற்கு செலவிட முடியும் என்றும் திருமலையில் 40 வீதம் சிங்களவர் உள்ளனர் ஆகவே அங்குநிறுவுவது சரியல்ல என்று கூறிச் சமாளித்து விட்டு அமர்ந்தாராயினும் இவரின் சாக்குப்போக்கான தெளிவற்ற பதிலை மக்கள் ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்படவில்லை.

இதன்பின் மற்றொரு இளைஞன் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சிலை வழி அனுப்பு விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பொழுது அதில் கலந்து கொண்டு கல்வி அமைச்சரைத் தாக்கியும் பிரதம மந்திரியைக் கண்டித்தும் பேசிய நீங்கள் இன்னும் தேசிய அரசாங்கத்துடன் ஈ போல் ஒட்டிக் கொண்டிருப்பதன் மர்மம் என்ன என்று? கேட்டான்.

இதற்கு பதிலளித்த பொன்னம்பலம் நான் கண்டனம் தெரிவித்தமை ஒரு போற்றுதற்குரிய விடயம். கண்டனம் தெரிவிப்பதனால் தேசிய அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் என்று கட்டாயம் இல்லை என்றார்.

இதைக் கேட்ட அவ்வாலிபன், ஒரு வீட்டினுள் இருந்து கொண்டே அங்குள்ளவர்களை எதிர்ப்பதை விட அவ் வீட்டிற்கு வெளியே வந்து அவர்களை பகிரங்கமாக எதிர்ப்பதுதான் உண்மையான வீரத்தையும் நேர்மையையும் வெளிப்படுத்தும் என்று அடித்துக் கூறினன்.

இதைக் கேட்டுக் கோபங் கொண்ட பொன்னம்பலம் "கேள்வி கேட்டால் எனக்கு உபதேசம் பண்ணத் தேவையில்லை" என்றார் ஆங்காரக் குரலில்:

இதற்கு அவ்விளைஞன் "நீர் கூறுவதையெல்லாம் கேட்டுத் தலையசைத்து விட்டுப் போக நாங்கள் இங்கு வரவில்லை. உம்முடன் கலந்துரையாடுவதற்குத் தான் இங்கு வந்தோம். அது தான் உண்மையான கேள்வி முறை" என்று கூறவே ஆத்திரமடைந்த பொன்னம்பலம் "அது உமக்கு கேள்வி முறையாக இருக்கும் எனக்கு அப்படியில்லை" என்றார். "நீர் நீதி மன்றத்திலே கேட்பது போல் அல்லவா எம்மிடம் கேட்கப்பார்க்கின்றீர்? என்றான் அவ்விளைஞன்.

'நான் அப்படித்தான் கேட்பேன்' என்ற பொன்னரிடம் அப்படியென்றால் நீர் ஊர்காவற்றுறையில் வெல்லுவதை நானும் பார்த்துக் கொள்ளுகின்றேன் என்றான் அந்த வாலிபன். இந்தச் சுவையான தர்க்கத்தையும் இதன் பின் கறுத்துப்போன பொன்னரது முகத்தையும் கண்டு சிரித்தார்கள் அங்கு கூடியிருந்தவர்கள்.

இதன் பின் காங்கிரஸ் கட்சி கிளை ஒன்றை நிறுவ விருப்பதால் இதற்கான உத்யோகத்தர்களைப் பிரேரிக்குமாறு சிவஞானம் அங்குள்ளவர்களிடம் கூறவே மக்கள் கூட்டம் கலைய ஆரம்பித்தது. பின் மக்கள் முன்னிலையில் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரமுகர்கள் யாவரும் ஆளுக்கொன்றாக உத்தியோகங்களை பகிர்ந்து கொள்ளக் கூடிய விதத்தில் அங்கு இருந்த அவர்களுடைய கையாட்கள் பிரேரித்தார்கள்.

இதன் பின் பொன்னம்பலம் பலத்த ஏமாற்றத்துடன் ஊர்காவற்றுறை மக்களுக்கு தன் மேல் [illegible] வெறுப்பையும் [illegible] கொண்டுதன் வீடு நோக்கி விரைந்தார்.

## கையில்...

(4ம் பக்கம் தொடர்ச்சி)

மொழி மட்டுமே ஆட்சி மொழியாக விளங்கியது.

ஆனால் இன்று நிலைமை வேறு. சிங்களவர்கள் இந்நாட்டில் பெரும்பான்மை மக்கள். சிங்களமொழி மட்டுமே ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கிறது. தமிழர்களை சிங்களவர்களாக்க சூழ்ச்சித் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. இந்நிலையில் தமிழர்கள் சிங்களம் படிப்பதால்—

இப்படி இருக்கும் போது திரு. அமிர்தலிங்கம் அன்று சமர்ப்பித்திருந்த திட்டத்தின்படி தமிழ்ப்பிள்ளைகளின் போதனு மொழி தமிழாகவும், மூன்றுவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய இரண்டாவது மொழியாகவும், கற்பிக்கப்பட வேண்டும்.

## ஜாதிகள்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்று தாழ்த்த — இப்படித்தான் மதம் இருக்கிறது.

இதைத்தான் நம்முடைய நாட்டில் சுயமரியாதை இயக்கம்சொன்னது. அதைத்தான் காந்தியடிகள் இந்தியா முழுதுக்கும் சொன்னார்,


**விரைவில் வெளி வருகிறது**

**பல்கலை**

ஆசிரியர்: எம். கே. அந்தனிசில்

தன் மான இனம் சன்மானம் கேட்காது
உரிமைகளைத்தான் கேட்கிறது
என்பதனை வலியுறுத்தி

**மாதம் மும்முறை**

முழக்கமிட
விரைவில் வெளி வருகிறது
பைந்தமிழ் சொல்லும்

**பல்கலை ஏடு**

**இலங்கை பூராவும் ஏஜன்டுகள் தேவை**

விபரங்கட்கு

நிர்வாகி,
பல்கலை,
28, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**வியாபாரத்துக்கழகு விளம்பரம செய்தல்**

**பேர்மிட் தேவையில்லை!**

ஒரு குறிப்பிட்டளவு

**டேவிட்பிரவுண்**

770 ரக ட்ராக்டர்கள்

ரூ 18,750 க்கு மட்டும் கிடைக்கும்

அத்தோடு

**டேவிட்பிரவுண்**

880 ரக ட்ராக்டர்கள்

ரூ 20,500/- க்கு உண்டு

இந்த மகத்தான சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். எழுதுங்கள். போன் செய்யுங்கள் அல்லது அருகாமையிலுள்ள டேவிட் பிரவுண் வியாபாரியைச்சந்தியுங்கள். அல்லது எங்களை நேரடியாகப்பாருங்கள்

**ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிடெட்**

103 [illegible] கொழும்பு 7 போன்-: 25871—8

HOUSE OF R ROWLANDS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பகுதியில் தொழிற்சாலை அமைத்தது தவறென்று தர்மலிங்கம் கூறினாரா?

தனது கட்சியின் கொள்கை இதுதான் என்று நாட்டு மக்கள் முன்பு வைப்பதற்கு கொள்கை ஏதுமின்றித் தடுமாறிவரும் தமிழ்க் காங்கிரசின் மஞ்சள் கடுதாசி தமிழரசுக்கட்சி மீது அற்பத்தனமாக பொய்களையும்புரட்டுக்களையும் அடிக்கடி வாரி இறைத்து வருகிறது பேனை பிடித்து எழுதத் தெரியாதகன்றுக் குட்டியொன்றைஆசிரியராகக் கொண்டுள்ள இந்த ஆசௌசப்பத்திரிகை, தமிழ்ப்பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவியதை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் கண்டித்துப் பேசியதாக முழுப்பொய்யொன்றை தனது அண்மிய இதழொன்றில் வெளியிட்டிருக்கிறது,

திரு. தர்மலிங்கத்தின் பேச்சை விளங்கிக் கொள்ளும் ஆற்றலின்றியோ, வேண்டுமென்று திரித்தோ தமிழ் காங்கிரசின் கஞ்சல் பத்திரிகை இப்படிச் செய்திருக்கிறது.

திரு. தர்மலிங்கம் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கைத்தொழில் அமைச்சு மானியம் மீது (8 9. 69 ல்) ஆற்றிய உரையில் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் பற்றி கூறிய கருத்துக்களை இங்கு அப்படியே பாரளுமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து மறுபிரசும் செய்கிறோம். வாசகர்கள் படித்துப் பார்த்து தமிழ் காங்கிரஸ் ஏட்டின் அற்பத்தனத்தையும் பொய்ப் பிரச்சாரத்தையும் புரிந்து கொள்வார்களாக.

திரு. தர்மலிங்கம் பேசியதாவது:-

இன்று நாம் விவாதித்துக் கொண்டிருக்கின்ற கைத்தொழில், மீன்பிடி அமைச்சு மிகவும் முக்கியமான ஓர் அமைச்சாகும். கைத்தொழில், மீன்பிடி அமைச்சின் திட்டங்களும் அவர்களுடைய செயலும் தான் எங்களுடைய வருங்காலப் பொரு

திறம்பட இயங்க முடியாமல் போய்விட்டன.

கடதாசித் தொழிற்சாலையை எங்கே வைக்க வேண்டுமென்ற பிரச்சினை எழுந்த போது, அதைக் காத்தான் குடியில் வைக்க வேண்டுமா, அல்லது வாழைச்சேனையில் வைக்க வேண்டுமா என்ற பிரச்சினை ஏற்பட்டது.



இத்திட்டங்கள் நன்றாக அமைந்திருந்தால் இன்றைக்குக் கைதொழில்கள் சிறப்பான ஒரு நிலையிலே இருந்திருக்கும்.

பருத்தித்துறையிலே 'கிலாஸ்' உற்பத்திற்கு திறமான மணல் இருக்கிறது என்பது எத்தனையோ விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கண்ட உண்மை. அந்த இடத்திலே கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பிப்பதற்கு தனியார் துறையினர் மாத்திரமல்ல. கூட்டுறவுத் துறையினரும் பல ஆண்டுகளாக முயற்சித்துக் கொண்டு வருகிறார்கள். திரு. வீ. கே. கே இராமசாமி போன்ற தனியார்களும், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுத் தாபனங்களும் அங்கேயொரு கண்ணாடி உற்பத்திச் சாலையை ஆரம்பிப்பதற்காக எத்தனையோ ஆண்டுகளாக விண்ணப்பித்து வந்திருக்கிறார்கள். பல தடவைகளிலே எத்தனையோ பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடத் தலையிட்டு இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் படியும் கண்ணாடித் தொழிற்சாலையை ஆரம்பிக்க அனு

கள. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக கண்ணாடிப் பொருட்களை உற்பததியாக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகையால், அரசாங்கம் கண்ணாடித் தொழிற்சாலையைப் பருத்தித்துறையிலே கூடிய விரைவிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனை நிறுவ அரசாங்கத்துக்குப் பண வசதி இல்லையென்றால், பண வசதியுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கோ, அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிம்மாசனப் பிரசங்க விவாதத்திலே அச்சுவேலியிலே அமைக்கப் போகும் தொழிற்பேட்டையைப் பற்றி இங்கு பேசப்பட்டது. யாழ்ப்பாணத்தின் வருங்காலம் கைத்தொழிலில்தான் தங்கியிருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. அரசாங்க உத்தியோகம் போய்விட்டது. கமத்தொழிலுக்கு அவ்வளவு தூரம் அங்கு இடமில்லை. ஆகையால், கைத்தொழிலில் தான் அந்தப் பகுதியின் வருங்காலம் தங்கியிருக்கின்றது.

ஏராளமான பணம் படைத்தவர்கள் யாழ்ப்பாணத்

## தமிழ் காங்கிரஸ் ஏட்டின் விஷமத்தனமான பிரசாரம்!

## வரவுசெலவு திட்ட விவாதத்தில் அவர் தெரிவித்த கருத்தென்ன?

ளாதாரத்தை நிர்ணயிக்கப் போகின்றன.

1956 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த அரசாங்கங்கள் ஒரு கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையையோ, அல்லது திட்டத்தையோ வைத்திருந்தார்களென்று கூற முடியாது. உண்மையிலே, 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் எமது பொருளாதார அபிவிருத்தியிலே கைத்தொழிலுக்கு ஒரு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது.

1951, 1952, ஆம் ஆண்டுகளிலே இருந்த அரசாங்கங்கள் ஒரு சில கைத்தொழில் ஸ்தாபனங்களை ஆரம்பித்திருந்த போதிலும் நேர்சீரான திட்டங்களை வகுக்காத காரணத்தினாலே அந்தக் கைத்தொழில் ஸ்தாபனங்கள்

இப்படியாக இவைகளையிட்டு ஒரு நிரந்தரமான திட்டமில்லாத காரணத்தால்தான் இன்றைக்குப் பரந்தனிலே யுள்ள இரசாயனத் தொழிற்சாலை திறம்பட இயங்கமுடியாமலிருக்கிறது.

இரசாயனத் தொழிற்சாலை இன்றைக்குத் திறம்பட இயங்கமுடியாமல் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம், 1951-52 ஆம் ஆண்டிலே அந்தத் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்ட அமைப்புத் திட்டம்-கொண்டுவரப்பட்ட செயல் முறைகள்—திறம்பட இல்லாதது தான். அதனால் தான் அத் தொழிற்சாலை நட்டத்திலே இயங்குகின்றது.

அந்தத் தொழிற்சாலை எத்தனையோ பொருட்களை

உற்பத்செய்திருக்கலாம். ஆனால் இன்று அத்தொழிற்சாலையிலே கோஸ்டிக் சோடாவை மாத்திரம் தான் உற்பத்திசெய்கிறார்கள். அங்கே உற்பத்திசெய்யப்படுகின்ற குளோரின் அயலிலேயுள்ள காற்றை நச்சுத்தன்மையாக்குகிறதே ஒழிய அதைப் பிரயோசனப்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் இத்தக் குளோரினைப் பயன்படுத்தி விற்பனைசெய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருக்கிறார்கள். அன்று மதி கொடுக்கும் படியும் கேட்டிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் இத்துறையிலே பருத்தித்துறையிலே கண்ணாடித் தொழிற்சாலையை ஏற்படுத்த அனு

மதி கொடுக்கவில்லை. எதற்காக, ஏன் கொடுக்கவில்லையென்பதை அறிய விரும்புகிறேன். அரசாங்கம் தனிப்பட்ட நபருக்கோ, அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்துக்கோ அனுமதி கொடுக்க விரும்பாது, அது அரசாங்கத்தின் தொழிற்கொள்கையில் இல்லையென்று நீங்கள் கருதினால், அரசாங்கமே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம்.

இன்று கண்ணாடித் தொழிற்சாலை, தண்ணீர் குடிக்கும் தம்ளர்களையும் போத்தல்களையும் சிமினிகளையும் தான் உற்பத்தி செய்கிறது. பருத்தித்துறையிலே உள்ள மணலாற்கூட சிறந்த கண்ணாடிப் பொருட்களை உற்பத்தியாக்கலாம் என்று அறிஞர்கள் ஆராய்ச்சியின் மூலம் எடுத்துக் கூறியிருக்கிறார்

தில் இல்லை. பண வசதியில்லாத காரணத்தால் சிறிய சிறிய கைத்தொழில்களை ஆரம்பித்துத் தான் எங்கள் வருங்காலத்தை நாம் சமாளிக்கக்கூடியதாக இருக்கும். அதற்காகத்தான் இந்தக் கைத்தொழில் பேட்டை மிகவும் அவசியம் என்பதை நாம் பல தடவை வற்புறுத்தியிருக்கிறோம்.

ஒரு கைத்தொழிற் பேட்டையை மாத்திரம் அச்சுவேலியிலே அமைப்பதனால் வருங்காலத்தைச் சமாளிக்க முடியாது. பல கைத்தொழில்களை அங்கு ஆரம்பிக்கும் அவசியம் ஏற்படும். ஆகவே, ஓர் ஆரம்பத்திற்காகவாவது அச்சுவேலியிலே இந்தக் கைத்தொழிற் பேட்டையைக் கூடிய விரைவிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# “நவரத்தினம் விட்ட தவறுகளுக்கு நாம் மன்னிப்புக் கேட்கிறோம்”



'தமிழரசுக் கட்சியின் கோட்டையாக விளங்கும் பருத்தியடைப்பில் வாழும் உங்கள் குறைகளைக் கேட்கவும் அவற்றை நீக்கவும் எங்கள் கட்சிச்சார்பில் நீங்கள் வாக்களித்துப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய திரு.வ. நவரத்தினம் முயலவில்லை என நீங்கள் முறையிடுகின்றீர்கள். இவ்வாறு திரு. நவரத்தினம் தங்கள் கட்சியிலிருந்து கொண்டு நடந்து கொண்டமைக்கு நாங்கள் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகின்றோம்'' என்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பருத்தி அடைப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக்கிளை நிறுவற் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் பொழுது கூறினார்.

திரு. இரத்தினம் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது: தீவுப்பகுதி மக்களின் குறைகளை நீக்கவும் அவர்களின் தேவைகளை நிரப்பவுமே நான் தீவுப்பகுதிவேட்பாளராகப் போட்டியிட முன் வந்தேன். திரு. நவரத்தினம் கட்சியினர் தங்கள் கூட்டங்களில் என்னையே தாக்குகின்றனர் ஏன்? அடுத்த தேர்தலில் வெற்றி எனக்கே என்பதை நன்கு அறிந்தமையால்தான் தமிழ் காங்கிரசும் இந்தக் காரணத்தாலேயே என்னை மட்டும் தாக்குகின்றது. தினபதி என்ற பத்திரிகையின்

ஆசிரியர் சிவநாயகம் திரு. நவரத்தினத்தினுடைய அரசியல்குரு என்னைப் பற்றிய பொய்யும் புரட்டும் எழுதிவருகின்றார். எனவே நீங்கள் மட்டுமன்று என்குறைந்தவரல்லர்; சிங்களம்

## பருத்தி அடைப்பில் பண்டிதர் பேச்சு!

ளோடு போட்டிபோடுகின்ற வேட்பாளர்களுக்கும் நானே வெற்றி அடைவேன் என்பது நன்கு தெரியும். எனக்கு வளர்ந்துவரும் ஆதரவைக் காணக்காண இவர்கள் தூற்றுவார்கள் துடிப்பார்கள் குரோதச் செயல்களில் இறங்குவார்கள். எனவே நாம் பொறுமையை இழக்

காமல் கருமமே கண்ணாக இருக்கவேண்டும்.''

போராட்டமின்றி, தியாகமின்றி நாம் இழந்த உரிமைகளைப் பெறமுடியாது. கல்வி அமைச்சர் இரியகொலை தமிழின விரோதி என்பதை யாவரும் அறிவர். இவருக்குப் பிரதம அமைச்சர் டட்லி

மட்டுமே அரசாங்க மொழியாயிருக்க வேண்டுமென்பதை 1944இல் ஆதரித்துத் தமிழுக்கு எதிராக வாக்களித்தவர் கௌரவ டட்லி சேனநாயக்கா. இவருடைய அரசாங்கம் தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகத்தைக் கொடுக்கும் என்றெண்ணுபவர்கள் இலவுகாத்த கிளிகள் போலத்தான் ஏமாற்

றம் அடைவார்கள்: டட்லி சேனநாயக்கா அரசாங்கத்திடம் இன்னும் நம்பிக்கை வைக்கலாம் என்று கூறுபவர்கள் அங்கொடைக்குத்தான் செல்லவேண்டியவர்கள்.

வடக்கு மாகாணத் தமிழரையும் கிழக்கு மாகாணத்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாயின் தலைமகனுக்கு தலைநகரில் சிலை நிறுவக்கூடாதா?

## நன்றி மறவாத் தமிழினமே! உன் நெஞ்சைத் தொட்டுக் கூறு!

## குறுகிய புத்திபடைத்தவர்களை அரசியலிலிருந்து விரட்டு!

தமிழ் இனத்தின் தன்மானத் தலைவர். தமிழ் மக்களுக்காக, தன உயிரையேஉதாசீனம்செய்த உத்தம சீலர் அமரர் வன்னியசிங்கம் அவர்களைச் சிலையுருவில் தமிழ் மக்களின் தலைநகரான யாழ் நகரில் நிறுவுவதைதடைசெய்யும்நொக்கமாகச் சில தீயசக்திகள் திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதைத் தமிழ் மீதும், தமிழ் அன்னை மீதும் பற்றும் பாசமும் கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் முறியடிக்க முன்னின்று பாடுபட வேண்டும்.

முதுகெலும்பில்லாத இந்த மூர்க்கர்களுடைய முகமூடியைக் கிழித்தெறிந்து, கேடுகெட்ட இந்தக் கெடுமதியாரின் பொருமைத் தீயைப் புதைகுழி தோண்டிப் புதைக்க ஒவ்வொரு தமிழ் மக்களும் தயாராக இருக்க வேண்டும், தன்னலத்திலே தாண்டவம் புரியும் தன் மானமில்லாத இந்த தமிழ் இனத் துரோகிகளை எம்மிடமிருந்து தூக்கி எறிய துள்ளும் இளமை கொண்ட இளைஞர்கள், கன்னித் தமிழ் பேசும் கன்னியர்கள், எல்லோரும் களிப்புடன் கடமை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

நாம் மானத்துடன், மங்காப்புகழுடன் வாழும் மண்ணில் தான் சில மடையர்களும், தன் மானம் இல்லாதவர்களும் தோன்றி எமக்கும், எமது மொழிகளும் இன்னல் தருவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்று நேற்றல்ல ஆதிகாலம் தொட்டே நமது அன்னை மொழி அரசுக்கட்டிலேறிய நாள் தொடக்கம் இருந்து வந்திருக்கிறது.

கட்டப்பொம்மனை அழிக்க எப்படி எட்டப்பன் எழுந்தானே, கன்னித் தமிழன் சங்கிலியனைச் சாவுக் கயிற்றில் ஏற்றச் சண்டாளன் காக்கை வன்னியன் எப்படிக் கங்கணம் கட்டினானே அதே போலத்தான் இப்பொழுதும் கோணல் புத்தி படைத்தவர்கள் கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்திற்கு சிலை அமைக்கக் குறுக்கே நிற்கிறார்கள். இவர்களின் இந்த இழிவான செயலை, எமக்கு இடர்தரும் வேலையைப் பற்றித் தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்கவோ, எழுந்தில் வடிக்கவோ வேண்டியதில்லை. என்றாலும் இந்தக் கும்பல்களின் கோழைத் தனத்தை, மற்றவர்களிடம் குறைகாணும் வழக்கத்தையே கொண்ட இந்தத் தேர்தல் காலத் தலைவர்களின் பேச்சைத் தேன் அமுதமாகவும் தேவ வாக்

நல்லை

**பத்மகாந்தன்**

காகவும் கொண்ட ஒரு சில தமிழ் மக்களுக்குத் தெரியப் படுத்துவது எமது கடமையாகும்.

தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு எந்த ஒரு நன்மை செய்தாலும் தன்னலமுள்ள இந்தத் தலைவர்களுடைய இதயம் தாங்காது. வைக்கற் போர் நாய் மாதிரி எந்த நேரமும் எதிர்த்துக் கொண்டே இருப்பார்கள். இவர்களுடைய இந்த இழிவுத் தனத்தால் நாம் இழந்த உரிமைகள் ஒன்றா...? இரண்டா...? தமிழரசுக்கட்சியினர் எதைச் செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு எதிர்ப்பவர்களாச்சே இவர்கள்.

தமிழ்த் தலைவனுக்கு நினைவுச் சின்னம் நிறுவ எதிர்க்கும் இந்த நீசர்கள் எப்படி நமது உரிமைகளைப் பெற்றுத் தர முன்வருவார்கள்? முத்தமிழ் காத்தவனுக்குச் சிலை அமைக்க முள்வேலிபோடும் இந்த முட்டாள்களா நமது மொழிக்காகத் தம் உயிரையே உவந்தளிக்கப் போகிறார்கள்? சிந்திக்கும் திறன் உங்களுக்குச் சிறிதேனும் இருந்தால் சின்னப் புத்தி படைத்த இந்தச் சிறுமதியாளர்களுடைய செயல்களை ஒவ்வொன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். இவர்கள் சிந்திய கண்ணீர்த் துளிகள் நிஜக் கண்ணீரா...? நீலிக் கண்ணீரா...? என்பது அப்போது உங்களுக்குப் புரியும்.

தமிழ்மொழி இத்தரணியிலே தவழ்ந்து விளையாட மெழுகுவர்த்தி மாதிரித் தன்னையே உருக்குலைத்து எமக்கு ஒளி காட்டிய ஒப்பற்ற தலைவருக்கு உருவச்சிலை எழுப்பத் தனிப்பெருந் தலைவருடைய வாலைப் பிடித்து நிற்கும் ஒருவர் ஒரு சில காரணம் காட்டி அமரருக்கு யாழ் நகரில் சிலை அமைக்கக் கூடாதென்று ஒரு பத்திரிகை மூலம் அறிக்கை விட்டிருந்தார்.

தமிழரசுக்கட்சியிலிருந்து தாவி ஓடி இப்பொழுது தனிப்பெருந் தலைவருடைய கட்சியில் குந்திக் கொண்டிருக்கும் கொள்கையற்ற இவர் கேட்கிறார் வன்னியசிங்கம் என்ன தேசியத் தலைவரா? அவர் எங்களுக்காக என்ன செய்தார்? அவருக்கு ஏன் யாழ்ப்பாணத்தில் சிலை வைக்க வேண்டும் என்று.

இவருடைய இந்தப் போக்கிரித்தனத்தைப் பற்றி நாம் அழுவதா...? சிரிப்பதா...? நிச்சயமாக இவர்களைப் பற்றித் தமிழ் மக்கள் நன்கு புரிந்திருப்பார்கள்.

நமது இனம் இந்நாட்டின் தேசிய இனமாக வேண்டும்: நமது அன்னைமொழி அல்லல் படாமல் ஆளும் மொழியாக வேண்டும் என்று அரசாங்கத்தை எதிர்த்து எமது மொழி எந்தவொரு இனத்திற்கும் அடிமைப்பட வேண்டியதில்லை என்று கூறியதற்காக அன்று காலி முகத்திடலில் காலிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு கடைசி வரை தமிழ் மக்களுக்காக தன் உயிரையே கொடுத்த தியாகசிலரைத்தான்? தேர்தல் டிக்கெட்டிற்காக தினசரி கட்சி மாறும் இந்த தில்லு மல்லுக்காறர் கேட்கிறார் தமிழ் மக்களுக்கு என்ன செய்தார் என்று.

உரிமைகளை இழந்து நிற்கும் உயர்குடித் தமிழினமே உங்களுக்கு தமிழ் உணர்ச்சி உண்டென்றால் இந்த உன்மத்தக் காரர்களின் உளறலை பற்றி ஒரு நிமிடநேரம் உணர்ந்து பாருங்கள். உண்மைக்கு நீங்கள் உயர்ந்த இடத்தைக்கொடுத்தால்...... சத்தியத்திற்கு நீங்கள் மதிப்பளித்தால்... இந்த சாகசக் காரர்களின் பேச்சை சாக்கடைச் சேறு என நினைத்து இவர்களின் சரித்திரத்தையே மாற்றி அமையுங்கள்.

ஏவல் பேய் மாதிரித் திரியும் இவருக்கு அமரரைப் பற்றி அறிக்கைவிட என்ன அந்தஸ்து இருக்கிறது? இவரை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஏதோ ஒரு கூட்டத்தில் அறிஞர் அண்ணாவைப் பற்றி பெரிதாகப் புகழ்ந்தீரே... அண்ணாவிற்கு சிலை அமைத்தது சரியென்று கூறினீரே...... அண்ணாவிற்கு எதற்காக சிலை வைத்தார்கள்...?

தமிழ் மொழிக்காகவும், அம்மொழியையே தாய் மொழியாகக் கொண்ட மக்களுக்காகவும் பாடுபட்டு...... அவர்களின் உரிமைகளை பெற்றுத் தந்த படியால் தானே அண்ணாவுக்கு சிலை அமைத்தார்கள். அப்படித் தானே நமது அமரர் வன்னியசிங்கமும் போராடினார்! அப்படிப்பட்டவருக்குச் சிலை அமைக்க கூடாதா...?

தமிழகத்திலே ஒரு தங்கம் தமிழ் மொழிக்காகத் தன் உயிரையே தந்து விட்டு சென்றது அதேபோலத்தான் எமது இலங்கையிலும் ஓர் இரத்தினம் இன்பத்தமிழ் காத்து இறந்து விட்டது. இந்தியாவில் ஓர் அண்ணா என்றால் ஈழத்தில் நமது வன்னியசிங்கம் தான் என்பதை தமிழ் மக்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மேலும் இவர் சொன்ன காரணங்களை கேட்டால் நம்மையறியாமல் எமக்கு சிரிப்புத்தான் வருகிறது. 20 வருடங்களாக ஒருவர் யாழ்ப்பாணத்தில் மேயராக கடமையாற்றினாராம்; முதலில் அவருக்குத் தான் சிலை எழுப்ப வேண்டுமாம்... நல்ல காலம் இருபத்தைந்து வருடகாலமாக தனிப் பெருந் தலைவர் பாராளுமன்றத்தில் பதுங்கியிருக்கிறாரே அவருக்கும் ஒரு சிலைவைத்தால் என்ன என்று கேட்காமல் விட்டாரே...!!

யாழ்நகரை அலங்கரித்து அணிகலன் பூட்டியவர்களுக்குத்தான் சிலை எழுப்ப வேண்டுமாம். நம் அன்னை மொழியை அன்னியர் ஆக்கிரமித்ததை ஆட்சேபித்து அடிஉதை வேண்டியவர்களுக்கு சிலை நிறுவக் கூடாதாம். எப்படி இருக்கிறது இவருடைய கதை...?

தமிழினமே தமிழ் தாயின் தவப் புதல்வனுக்கு தமிழ் மொழிக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் போராடியவருக்கு தமிழ் மக்களின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் சிலை அமைக்க கூடாதா...? கூறுங்கள்... குறுகிய மனப்பான்மை கொண்டு எமது குலத்தை அழிக்க வந்த கொடுமதியாரின் கூற்றுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கலாமா......? அன்புக்கு கட்டுப்பட்ட தமிழ் மக்களே இனி மேலும் பொறுமை குணம் படைத்தவர்கள் நம் மத்தியில் இருக்க இடம் வழங்கலாமா...?

## வெற்று வார்த்தையை விடு

(காரை செ. சுந்தரம்பிள்ளை)

அந்த நாளிலே எங்கள் தமிழர்கள்
அகிலம் போற்றிட ஆட்சி புரிந்தனர்
சொந்த நாட்டிலே செல்வம் பெருக்கியே
சோற்று மெத்தையி லேபுரண் டார்களாம்
அந்த வாறிருந் தார்களே யாயினும்
ஐக்கி யத்துடன் வாழவே யில்லையாம்
எந்த நாளுமே சண்டை பிடித்ததால்
இறுதி யில்தலை கீழாய் விழுந்தனர்.

ஞால மெங்கணும் கப்பல் விடுத்தவர்
நாக ரீகத்தின் உச்சியில் நின்றவர்
காலப் போக்கினில் வீழ்ந்தனர் என்றிடில்
கட்டுப் பாட்டுடன் ஒற்றுமை யின்மையே
கோளு ரைப்பதும் குண்டணி சொல்வதும்
குற்ற மாயிரம் கண்டு பிடிப்பதும்
காலை வாருவ தும்தொழி லாகவே
காலந் தள்ளுவ ரோதமிழ் மானிடர்.

கற்ற வர்க்குள்ளே வித்துவக் காய்ச்சலும்
கலைஞர்கட் குள்ளே போட்டி பொறுமையும்
மற்றவர்க் குள்ளே காசுப் பொருமையும்
மாற்ரு னுக்கெமைக் காட்டிக் கொடுப்பதும்
ஒற்று மைக்குலை வைத்த படியினுல்
உலக மெங்கணும் வேற்றுமை யுற்றனம்
நிற்க வேர்நிழல் அற்ற தமிழர்கள்
நீள்புவி தனில் இன்று பெருகினர்.

கற்பனைக் கதை ஆயிரம் பேசியே
கடந்த காலப் பெருமையில் மூழ்குதல்
நற்பயன் தராதென்பதை நம்மவர்
நன்கு சிந்தனையிற் கொள்ளல் வேண்டும்வீண்
வெற்று ரைதனை விட்டு விழித்திடில்
வேண்டும் ஆயிரம் இன்பங்கள் சேருமே
பற்பல வகையான பெரும் புகழ்
பைந்தமிழ் இனத்தார்க் குறும் உண்மையே

## கர்ப்பக் கிருகம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

'இல்லைக் கீதா. என் வாழ்வே அடியோடு பாதிக்கப்பட்டு விட்டது'

'பிரகாஷ்' என்று அவனை அணைத்துக் கொண்டாள் கீதாஞ்சலி.

'என்னைத் தொடாதே கீதா. மனிதர்கள் கணநேர உணர்வுக்கு அடிமையாகி உலகத்துக்கே பெரிய தீமைகளைச் செய்து விடுகின்றனர். நீ கூட அன்று அன்பு மிகுதியினுல் அவசரப்பட்டுச் செய்த காரியம் எவ்வளவு பெரிய...

'பிரகாஷ் நான் அவசரப்பட்டு விட்டேன் தான். ஆனுல் நானே உங்களை மணம் செய்து கொள்ளப் போறவள் தானே? அதனுல் என்ன?'

'யாராவது பார்த்திருந்தால்'

'பார்க்கட்டுமே. அதனுல் என்ன குடியா முழுகிவிடும்' என்றவள் தொடர்ந்து 'நீங்கள் ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்' என்ருள்.

ஆதிபோடந்தமாக எல்லா விடயத்தையும் கூறி முடித்தான் பிரகாஷ்.

'உங்களுக்கு ஒரு தங்கையிருப்பதாகக் கூறவில்லையே நீங்கள். நான் வந்து உங்கள் தங்கையைப் பார்க்கவா,

''அது மட்டுமல்ல கீதா. இனி நான் இங்கே ரியூசனுக்கு வரவும் முடியாது என்னை மன்னித்து விடு.'

அவன் விழிகள் பனித்தன;

'நீங்கள் எவ்வளவு சுயநலக்காரர். நான் உங்களிடம் படிப்பது தான் விருப்பமில்லையென்றாலும் என்னைக் கைகழுவி விடத் துணிந்து விட்டீர்களா?'

'கீதா நான் சொல்வதைக் கேள். தங்கையை [illegible] விட்டு விட்டு எ[illegible] குமே போக' முடிவதில்லை. இனி அப்படிப் போகவும் முடியாது.'

'அப்படியானுல் நானே அங்கே வருகின்றேன் பிரகாஷ்

'கீதா....நீ...'

'உண்மையாகவே தான் பிரகாஷ் நான் அங்கேயே வந்து விடுகின்றேன். எனக்கு இந்த ஊர் பழக்கப்பட்டது தானே.

''உன் இஸ்டம். நான் வருகின்றேன்.' என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

வீட்டுக்குச் சென்ற பிரகாஷ் உள்ளே பேச்சுக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்ருன். திடீரென அவன் மனதில் ஏதோ ஓர் இனந்தெரியாத பலஹீனம். ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது




இரண்டாம் திகதி முதல் சிலோன் தியேட்டஸ்சாரின் திரைகளில்

செல்லமாஹால் (கொட்டாஞ்சேனை) இம்பீரியல் (மட்டு நகர்) ஈரோஸ் (ஒரு கிழமை மட்டும்)

வெகு விரையில் வின்சர் யாழ்ப்பாணம்

ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, வி. கே. ராமசாமி, பார்வதி, இந்திராதேவி, தனம், நடித்த,

# அன்று கண்ட முகம்

(நன்று என்று மலரும் அகம்)

இசையமைப்பு: கே. வி. மகாதேவன் பாடல்: கவிஞர் கண்ணதாசன்

இப்பொழுது 6—வது வாரமாக காட்சியளிக்கிறது!

கெயிட்டி—கொழும்பு

எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, நாகேஷ், நடித்த,

# புதிய பூமி

## 3-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ரவிச்சந்திரன், ராஜஸ்ரீ, நாகேஷ், ஸ்ரீரஞ்சனி, அசோகன், வசந்தா, மனோகர், விஜயஸ்ரீ நடிக்கும்

# நீயும் நானும்

இசை: எம். எஸ். விஸ்வநாதன், டைரக்ஷன்: ராமண்ணா.



## 6வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

ரங்கராவ், அஞ்சலிதேவி, பேபிரோஜாரமணி, பாலையா, எல். விஜயலட்சுமி, ஏ. கருணாநிதி, கீதாஞ்சலி, வாணிஸ்ரீ மற்றும் பலர் நடிக்கும்

# பக்த பிரகலாதா

ஈஸ்ட்மன் கலர்

## 11 வது வாரமாக ஜனவெள்ளம் பெருக்கெடுத்து காட்சியளிக்கிறது!



சென்ட்ரல் (மருதானை) லிபர்ட்டி (ஹட்டன்)

6ந்—திகதி முதல் ஆனந்தா கம்பளை

நடிகர்திலகம் ★ சிவாஜிகணேஷன் (இரு வேடங்களில்)

கவர்ச்சிக்கன்னி ★ ஜெயலலிதா, என்.எம். நம்பியார், நாகேஷ் மனோரமா, சௌகார்ஜானகி, வசந்தா மற்றும் பலர் நடித்த,

சிவாஜிகணேஷன் அளிக்கும் அருண் பிரசாத் மூவிஸ்

# எங்க ஊர் ராஜா

கதை வசனம்: பாலமுருகன், இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: P. மாதவன்

## விரைவில் எதிர்பாருங்கள்!!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா அசோகன் சோ நடித்த

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# அடிமைப் பெண்

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ... நாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1959 வருடம் செப்டம்பர் மாதம் 3-ந் திகதி ... பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org